
வெளியீடு எண் 45.

திருவிடைமருதூர்

(தலவரலாறு)



திருக்கோயிலின் தோற்றம்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

திருவிடைமருதூர்

1978

34-1

வெளியீடு எண் 45.

உ

சிவமயம்

திருவிடைமருதூர்

(தலவரலாறு)

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது

மகாசிவராத்திரி வெளியீடு

திருவிடைமருதூர்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

7—3—1978

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —



ஸ்ரீ மகாலிங்கப்பெருமான்

முகவுரை

நகருளே நம்பர் திருவிடை மருத
நகர்மிகச் சிறந்ததாம் வேதம்
பகருமந் திரத்துள் உருத்திர மனுவும்
பழிப்பின்மெய்த் துறவருள் ஞானச்
சுகருமெய்ந் நாயன் மார்களுட் சமய
குரவர்கள் நால்வருந் தொல்லோர்
நிகரில்பா டியத்துட் சிவஞான யோகி
நிறிஇயமா பாடிய மும்போல்.

திருவிடைமருதூர் சோழநாட்டுக் காவிரித் தென்கரையில் உள்ள பாடல்பெற்ற தலங்களுள் மிக்க சிறப்புடைய தலமாகும். இது குடந்தையிலிருந்து மாயூரம் செல்லும் பெருவழியில் உள்ளது. இத்தலத்தின் தலவிருட்சம் மருதமரம். இதனுல் இத்தலத்தை மருதவனம் என்றும் வழங்குவர். இறைவர் மகாலிங்கேசுரர். அம்மையார் பெருநலமாமுலையம்மை. தலவிநாயகர் ஆண்ட பிள்ளையார்.

கோயிலில் மக்கள் மனம் பெரிதும் ஈடுபட வேண்டும். இதனைப் பின்வரும் தேவாரம் நன்கு விளக்குகின்றது.

குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே.

இத்திருப்பாட்டின்படி நாட்டில் மக்கள் எங்கெங்கு வாழுகின்றார்களோ அங்கெல்லாம் கோயில்கள் நிறைந்து இருப்பதை நாம் காண்கிறோம். 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'. என்ற மொழியின்படி கிராமமாயினும் நகரமாயினும் அங்குள்ளவர்கள் வேத ஆகம சாத்திர முறைப்படிக் கோயில்களை அமைத்துப் பிரதிட்டை செய்து, அதிலுள்ள இறைவனை வணங்கி வழிபட்டு அருளடைய விழைவதைக் காண்கிறோம். மேலும் கோயில்களில் நித்திய நைமித்திக வழிபாடுகள் நடக்க ஏற்பாடுகள் செய்துவைத்துள்ளமையும் அவ்வாறே அச்செயல் சிறப்பாக நடைபெறுவதையும் அறியாதார் யாருமில்லை.

இத்தலத்தை மத்யார்ச்சுனம் என்ற பெயராலும் இத்தலபுராணம் கூறுகிறது. முறையே வடக்கே ஸ்ரீபர்ப்பதமாகிய மல்லிகார்ச்சுனமும், தெற்கே அம்பாசமுத்திரத்திற்கு அருகாமையில் உள்ள திருப்புடைமருதூராகிய புடார்ச்சுனமும் விளங்க, இவற்றின் இடையில் இத்தலம் உள்ளதால் இது மத்தியார்ச்சுனம் என்ற பெயரைப் பெற்று விளங்குகிறது. அர்ச்சுனம் என்றால் மருது. இம்மூன்று தலங்களுமே மருதைத் தலவிருட்சமாகக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது. இத்தலத்தை அடைந்து வழிபட்டுப் பேறுபெற்றோர் உமாதேவியார், விநாயகர், முருகன், திருமால், காளி, இலக்குமி, சரஸ்வதி, வேதங்கள், வசிட்டர் உரோமசர், அயிராவணம் என்னும் யானை, சிவவாக்கியர், கபிலர், அகத்தியர், வரகுணதேவர், பட்டினத்தடிகள் முதலியோர்.

வரகுணதேவ பாண்டியனுக்குப் பிரமகத்தி நீங்கிய தலம். இப்பிரமகத்தி இரண்டாங் கீழைக் கோபுரத்தின் வலப்பக்கத்தில் உள்ளது. கீழைக் கோபுர வாயிலில் பட்டினத்தாரும், மேற்குக் கோபுரவாயிலில் பத்திரகிரியாரும் உள்ளனர். உமை மௌனமாக இருந்து யோகஞ்செய்த மூகாம்பிகை சந்நிதி, அம்பாள் கோயில் வாசலில் தனியேயிருக்கிறது. இவ்வம்மையை இத்தலக் கல்வெட்டு யோகிருந்த பரமேஸ்வரி என்று குறிப்பிடுகிறது. இத்தலத்திலுள்ள பெரிய பிரகாரத்திற்கு அஸ்வமேதப் பிரகாரமென்று பெயர். பைத்தியம் பிடித்தவர்களும், மனக்குறைவுள்ளவர்களும் இன்றும் அதனை முறைப்படி வலம்வந்து நன்மை பெறுகின்றார்கள்.

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 159 அரசியலாரால் படியெடுக்கப்பட்டுள்ளன. அவைகள் பராந்தகன் I. (கி. பி. 905, 947) குலோத்துங்கன் காலம்வரை உள்ளவையாகும். இவையேயன்றி பாண்டிய மன்னர்கள் கல்வெட்டுக்களும் உள்ளன. இக்கல்வெட்டுக்களால் இத்தலம் உய்யக்கொண்ட சோழவளநாட்டு, திரைமூர்நாட்டு திருவிடைமருதூர் என்று அறியப்படுகிறது. கல்வெட்டிலிருந்து ஸ்ரீமகாலிங்கேசுரருக்கு ஏகநாயகர் ஆடல்விடங்க தேவர் என்ற பெயருண்மை தெரிய வருகிறது.

இவையே அன்றி இன்னும் பல கல்வெட்டுக்களால் திருமஞ்சனம் கொண்டுவர மண்குடங்கள் அளிக்கப்பட்டமை அறியப்படுகின்றது. இதனால்

சுவாமி அபிஷேகத்திற்கு மண் குடங்களிலேயே காவிரி தீர்த்தம் கொண்டுவந்தமை அறியலாம். ஸ்ரீ மகாலிங்க சுவாமிக்கு நாளும் செண்பகப்பூ சாத்துவதற்குத் திருவெண்காடு பிச்சன் என்பவன் நிலம் அளித்துள்ளான். கி. பி. 985–1113 இவ்வாண்டுகளில் ஆட்சிபுரிந்த அரசன் மனைவி பஞ்சவன் மாதேவியார் உமா சகிதருடைய தங்க உருவம் அமைத்துக் கொடுத்துள்ளாள். மேலும் 1895-ல் படியெடுத்த S. I. E. I. 193-ம் கல்வெட்டு இத்தலத்தின் தெற்கெல்லையாக அமைந்து விளங்கும் திருநீலக்குடியில் ஒரு பொதுச்சபை இருந்ததாகவும், அது திரைமூர் நாட்டைச் சார்ந்ததென்றும், அந்தச் சபையாரிடம் இக்கோயிலுக்கென்று அளித்த நில தானங்களை ஒப்புவித்ததாகவும் செய்தி காணப்படுகிறது. இதிலிருந்து அக்கால அரசு நிருவாக அமைப்பு முறையினை அறியலாம்.

இத்தல வரலாற்றுள் புராண வரலாறுகளோடு இன்றி அமையாத வரலாற்றுக் குறிப்புக்களும் இடம் பெற்றுள்ளன. மேலும் இத்தலத் தொடர்புடைய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, மும்மணிக் கோவைகளும் இதனுள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தலத்தைப்பற்றிய எல்லா நூல்களும் தனியாக முன்னரே அச்சிடப்பட்டுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனம் சமய வளர்ச்சி கருதி நூல்கள் வெளியிட்டு இலவசமாக வழங்கி வருதலோடு, சமயப்பிரசாரங்களும் அவ்வப்போது செய்து வருவது என்பது முறையான ஒன்று.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருள் ஆணை ஏற்று அடியேன் இத்தல வரலாற்றைச் சுருங்கிய அளவினிலே எழுதி முடித்துள்ளேன். இக்காலம் ஒவ்வொரு செயலையும் ஆய்வுக்கண் கொண்டு நோக்குகிற காலம். ஒன்றுக்கும் பற்றாத அடியேன் உரையில் குற்றங்கள் பல நிறைந்து இருக்கலாம். இந்நூலினை எழுத அருளாணையிட்ட திருவாவடுதுறை ஆதீனம் இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவடிகளை வந்தித்து வாழ்த்திச் சிந்தித்திருத்தலே யன்றி அடியேன் என்செய்யக் கடவேன்.

வெளிவரவேண்டிய இன்றி அமையாத பல நூல்களையும் இக்கால நிலையிலுள்ள மக்கள் அறிந்து பயன்பெறுமாறு திருவுளங்கொண்டு இதனை இவ்வாண்டு சிவராத்திரி விழா மலராக வெளியிட அருளாணையிட்டார்கள். ஆணையின் வண்ணம் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம் சிவராத்திரி வெளியீடாக இது பொழுது இந்நூல் வெளிவருகின்றது. குறையுள தாயின் அறிஞருலகம் பொறுத்தருள்க.

இங்ஙனம்,

வித்துவான்

பொன். சுப்பிரமணிய பிள்ளை

நூல்நிலையக் காப்பாளர்,

திருவாவடுதுறை ஆதீனம்.

திருவாவடுதுறை,

1—3—78.

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணைப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

திருவிடைமருதூர்

(தலவரலாறு)

தலத்தின் இருப்பிடம்

பூவினுள் பதுமம் போலும் புருடருள் திருமால் போலும்
காவினுள் கற்பம் போலும் கலைகளுள் ஞானம் போலும்
ஆவினுள் சுரரான் போலும் அறத்துள்இல் அறமே போலும்
நாவினுள் மெய்ந்நாப் போலும் நாட்டினுள் சோழ நாடு.

பூக்களுள் தாமரையும், புருடருள் திருமாலும், சோலைகளுள கற்பகச்சோலையும், கலைகளுள் ஞானமும், ஆக்களுள் காமதேனுவும், அறங்களுள் இல்லறமும், உண்மைகூறும் நாவும் சிறப்புமிக்கு விளங்குவது போல நாடுகளுள் சிறப்புடையதாகப் பொன்னியாறு புனல்மல்கிப் பல வளங்களையும் தருவதால் மேம்பட்டு விளங்குவது சோழநாடு. அத்தகு சோழநாட்டிலே பொன்னி ஆற்றுக்குத் தென்பால் ஒரு கல் தொலைவிலும், திருவிடைமருதூர் புகைவண்டி நிலையத்துக்கு வடபால் கூப்பிடு தூரத்திலும் திருக்கோயில் அமைந்துள்ளது. கோயிலின அமைப்பு சோழ, பாண்டியக் கலைகளின மேன்மையை விளக்குவதாக உள்ளது.

இத்திருக்கோயிலின் அமைப்பு மிக அழகாகவும், அமைதியும் இனிமையும் குடிகொண்டதாகவும் கிழக்கு முகமாய் அமைந்திருக்கிறது. கீழைக் கோபுரத்துத் திருமதிலைஒட்டி ஒரு ஏக்கர் அளவில் காருணியாமிருத

தீர்த்தம் பொலிவுடன் விளங்குகிறது. நாற்புறமும் சுற்றுச் சுவருடனும், கீழ்க்கரையில் நாயடியார் என்ற தனிக்கோயிலுடனும், மூன்று பிரதான வாயில்களைப் பெற்று அது விளங்குகிறது.

கோயிலின் நான்குபக்கமும் பெரிய திருமதிலோடு கூடிய நான்கு ராஜகோபுரங்கள் நான்கு பக்கங் களிலும் உள்ளன. அவைகளுள் மேற்கேயுள்ள ராஜ கோபுரம் மிகப்பெரியதாகும். இவையன்றிக்கோயிலுள் பாண்டியன் கோபுரம் என்று ஒன்று உளது. இதனை யும் சேர்த்து இக்கோயிலில் ஐந்து கோபுரங்கள் உள்ளன.

திருக்கோயிலில் இப்பொழுது மூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. ஒன்று அசுவமேதப் பிரதட்சிணப் பிரகாரம் (வெளியேயுள்ள பெரிய பிரகாரம்) இரண்டு கொடுமுடிப் பிரகாரம், மூன்று பிரணவப் பிரகாரம், இவ்விரண்டும் மூலவர் திருக்கோயிலைச் சுற்றியுள்ளன. இவைகளை அன்றி நான்குபுறமும் மடவிளாகங்களும், தேரோடும் நான்கு பெரிய வீதிகளும் நன்முறையில் அமைந்து விளங்குகின்றன.

சுற்றுக்கோயில்

தேரோடும் நான்கு வீதிகளின் மூலைகளிலும் விநாயகர் கோயிலும், தேரடியில் ஒரு விநாயகர் கோயிலும் உள்ளன. கீழவீதியின் கீழ்ப்பால் உள்ள விசுவநாதபுரத்தில் விசுவநாதர்கோயில் திருவாவடு துறை ஆதீனத்துக்குச்சொந்தமாக உளது. அண்மை யில் அது பெரும் பொருட்செலவில் திருப்பணி செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. மேலவீதியில் ரிஷிபுரீஸ்வரர் கோயில் உளது. தெற்கு வீதியில் ஆத்மநாதர் ஆலயம் உள்ளது. வடபால்

சொக்கநாதர் ஆலயம் உள்ளது நான்கு திசைகளிலும் நான்கு இலிங்கங்கள் விளங்க, நடுவில் மகாலிங்கப் பெருமான வீற்றிருப்பதால் இது பஞ்சலிங்க ஸ்தல மாகும். இவையேயன்றி வடக்குக் கோபுரத்தை ஒட்டி அகோர வீரபத்திரர் கோயிலும், மேற்குக்கோபுரத்தை ஒட்டிக் குமரன்கோயிலும் உள்ளன.

உட்கோயில்

கிழக்கோபுரவாயில் கடந்ததும் காண இருப்பது படித்துறை விநாயகர் கோயிலாகும். இவ்விநாயகர் காவிரியின் படித்துறையில் விளங்கியவர் என்பதை இந்தத் தலத்து வீரசோழன் காலத்துக் கல்வெட்டால் அறியலாம். கோயிலின் உள் சந்நிதிக்குத் தென்பால் ஆண்ட விநாயகர் கோயில் அழகாக அமைக்கப் பட்டுள்ளது. பிரணவப் பிரகாரத்தின் வடக்கில் தல விருட்சமாகிய மருத விருட்சம் உள்ளது. அதன் எதிரே மேல்பால் வேம்படிக் குமரர் கோயில் தனியே உளது. இரண்டாவது பிரகாரமாகிய கொடுமுடிப் பிரகாரத்தின் வடபால் சொக்கநாதர் கோயில் உளது. மழையின்றி நாடு வாடுங்காலத்தில் இவ்விறைவருக்குச் சிறப்பாகப் பூசைசெய்து, மேகராகக் குறிஞ்சிப் பண் பாராயணஞ்செய்தால் உடன் மழை பொழிகின்றது என்பது நடைமுறையில் உள்ள ஒன்றாகும். முதல் பிரகாரத்தின் வடபாலும், தெற்குக் கோபுரத்துக்கு மேல்பாலும், அம்மன் சந்நிதிக்குத் தென்பாலும் இறைவி தவஞ்செய்யும் கோலத்தில் அமர்ந்துள்ள மூகாம்பிகை கோயில் உளது. ஐம்பத்திரண்டு சக்தி பீடத்துள் இதுவும் ஒன்றாகும். இக்கோயிலின் கருப்பக் கிரகம் வடநாட்டு முறையில் சிறப்புற அமைந்துள்ளது. இக்கோயிலுள் மேரு சக்கரம் பிரதிஷ்டை செய்யப் பட்டு தனியே வைக்கப்பட்டுள்ளது.

பரிவாரத்தலங்களின் சிறப்புக்கள்

பரிவாரத்தலங்கள்

அணிமருவும் இடைமருதீ சருக்கு நந்தி
ஆவடுதண் துறைசோமாக் கந்தராரூர்
திணிபுகழாலங்குடியில்குருமூர்த்தியானைத் [வேள்
திருமுகத்தோன் வலஞ்சுழியே ரகத்திற்செவ்
கணிதருமாப் பாடியிற்சண் டீசன் தில்லைக்
கதிர்ப்பொதுவில் நடக்கடவுள் வடுகன்காழி
பணிமருவு மாந்துறையின் இரவி யாகும்
பரமனெழிற் பதமலருக் கன்புமிக்கீர்.

திருவிடைமருதூர் நடுநாயகத் தலமாகவும், அத்தலத்தைச்சுற்றித் திருவலஞ்சுழி, சுவாமிமலை, திருவாப்பாடி, சூரியனார்கோயில், சிதம்பரம், சீகாழி, திருவாவடுதுறை, திருவாரூர், திருவாலங்குடி இவைகள் பரிவாரத் தலங்களாகவும் விளங்குகின்றன.

திருவலஞ்சுழி

விநாயகர்

பூச நீர்பொழி யும்புனற்
பொன்னியிற் பன்மலர்
வாச நீர்குடை வாரிடர்
தீர்க்கும் வலஞ்சுழித்
தேச நீர்திரு நீர்சிறு
மான்மறி யீர்சொலீர்
ஏச வெண்டலை யிற்பலி
கொள்வதி லாமையே.

இத்தலம் சென்னை திருச்சி புகைவண்டி வழியில் சுவாமிமலை புகைவண்டி நிலையத்திலிருந்து அரை கல் தொலைவில் உள்ளது. தேவேந்திரன் வழிபட்ட தலம். இத்தலத்துக்கு வடக்கில் அரிசிலாறு ஓடுகின்றது. தல விநாயகர், வெள்ளை விநாயகர். விநாயகர் இருக்கும் மண்டபம் மிக்க சிற்ப வேலைப்பாடு உடையது. இவ் விநாயகரைப் பூஜித்ததால் அமுதம் திரண்டதெனவும், தேவேந்திரன் இவ்விநாயகரைப் பூஜித்தனன் எனவும், அவன் திருவலஞ்சுழிக்கு வந்த காலத்தில் இந்த விநாயகர் இந்தத் தலத்தில் நின்றுவிட்டனரெனவும் சொல்லுகின்றார்கள். இங்கு பிரமோற்சவம் முதலியன விநாயகருக்குத்தான் நடக்கின்றன. விநாயகரைத் தீண்டக்கூடாதாம்.

பிலத்திற்சென்றுவிட்ட காவிரி வெளிப்படும் நிமித்தம் ஏரண்ட முனிவர் தம்மைப் பலிகொடுத்த பின், அது மேலே வந்து வலமாகச் சுழித்துக் கொண்டு சென்ற காரணத்தால் ஊருக்குத் திருவலஞ்சுழி என்று பெயர் வந்ததென்று காரணம் சொல்லுகின்றார்கள். அம்முனிவருடைய உருவமும் கோயிலில் இருக்கின்றது. அவருக்குப் பக்கத்தில் வலஞ்சுழிநாதர் என்னும் சிவலிங்கப் பெருமான் வீற்றிருக்கிறார். கோயில் மிகப் பழமையானது.

சுவாமிமலை

குமரக்கடவுள்

சமர சூரபன் மாவைத் தடிந்தவேல்
குமரன் தாதைநற் கோழம்ப மேவிய
அமரர் கோவிலுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாளுடை யார்களே.

இது திருவேரகம் என்பதாகும். முருகப் பெருமானின் ஆறுபடை விடுகளில் ஒன்று. திருவலஞ்சுழியிலிருந்து ஒரு கல் தொலைவில் உளது. இக்கோயில் பிரார்த்தனைத் தலமாகவும், திருமணம் செய்துகொள்ளும் தலமாகவும் விளங்குகின்றது. தென்னாட்டுச் சிறந்த தலங்களுள் இதுவும் ஒன்று.

திருவாப்பாடி

சண்டிகேஸ்வரர்

அண்டமார் அமரர் கோமான்
ஆதியெம் அண்ணல் பாதங்
கொண்டவன் குறிப்பினாலே
கூப்பினான் தாபரத் தைக்
கண்டவன் தாதை பாய்வான்
காலற வெறியக் கண்டு
தண்டியார்க் கருள்கள் செய்த
தலைவராப் பாடியாரே. -திருநாவுக்கரசர்.

இத்தலத்துக்கு ஆடுதுறையிலிருந்தும், குடந்தையிலிருந்தும் பஸ் மார்க்கம் உண்டு. இது திருப்பனந்தாளுக்குத் தென்மேற்கில் ஒரு கல் தொலைவில் உள்ளது. மண்ணியாறு கோயிலுக்கு வடக்கே ஓடுகின்றது. இது சண்டேசுரநாயனார் வழிபட்ட தலம்.

இங்கிருந்த இடையன் ஒருவன் பாலைக்கறந்து வீட்டுக்குக் கொண்டுபோகின்ற பொழுது வழியிலே நாள்தோறும் கால் தடுக்கிப் பால் கவிழ்ந்துகொண்டு வருதலை உணர்ந்து, கையிலிருந்த கொடுவாளால் அவ்விடத்தில் ஓச்ச, அங்கிருந்து இரத்தம் வெளிப் படக்கண்டு மனமிரங்கி (பாலுகந்தநாதரோ) என்று தொழ சுவாமி அவனுக்கு அனுக்கிரகம்செய்த தலம்.

சண்டேசுர நாயனுர் வரலாறு

சோழநாட்டிலே திருப்பனந்தாளுக்கு அண்மையில் உள்ளது திருச்சேய்ஞலூர். அவ்வூரில் அந்தண குலத்தில் தோன்றியவர் இவர். இயற்பெயர் விசார சருமர். இவருடைய தந்தை எச்சதத்தன் என்பவர். விசாரசருமர் இளமையிலேயே தவ உணர்வு பெற்றவராய் ஆனிரைகளை மேய்க்கும் பணியை மேற்கொண்டார். மண்ணியாற்றின் கரைகளில் பசுக்களைமேய்த்து வரலானுர்.

பசுக்கள் பாலைச் சொரியுந்தோறும் இறைவனின் திருவபிஷேகம் இவருக்குநினைவுவரும். அவ்வெண்ண முதிர்வினுல் இவர் மண்ணியாற்றில் ஆத்திமரத்து நிழலில் மணலைச் சிவலிங்கமாக்கி, அபிஷேக ஆராதனைகள் செய்துவரலானுர். இவரது இந்தச் செயலை அறிந்த ஊரார் இவரது தந்தைக்கு அறிவித்தார்கள்.

எச்சதத்தர் ஊராரை முன்னிட்டுத் தன் மகனின் செயலை மறைந்து கவனித்தார். விசாரசருமரின் மனம் உவந்த வழிபாட்டை மதியாது பாற்குடங்களைத் தனது காலால் எற்றலானுர். விசாரசருமரும் உடன் எதிரில்கிடந்த கோலை எடுத்தார். அது மழுவாயுதமாயிற்று. அதனுலே தந்தையின் காலைத்தடிந்தார்.

அந்நிலையில் இறைவர் விசார சருமருக்குக் காட்சி அருளி, ''உமக்குத் தொண்டர்க்குத் தலைவனும், சண்டீசபதத்தை அருளினேம்'' என்ருர். எச்சதத்தரும் இறையருளால் முடிவிடிலா இன்பதை எய்தினுர்.

திருச்சேய்ஞலூர் திருவாப்பாடியில் இருந்து 1-மைல். சேய் (குமரன்) தாம் உறைவதற்கு நல்ல ஊர் என்று உவந்து தங்கிய தலம். சண்டேசுர

நாயனார் அவதரித்து முத்தி பெற்ற தலம். 'சேயடைந்த சேய்ஞலூர்' தேவாரம்.

பீரடைந்த பாலதாட்டப் பேணுதவன் தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமைவகுத்த தென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே.

— திருஞானசம்பந்தர்.

சூரியனார் கோயில்

(திருமாந்துறை) சூரியன்

இந்தத்தலம் ஆடுதுறை புகைவண்டி நிலையத்திலிருந்து ஒன்றரைக்கல் தொலைவில் வடக்கேயுள்ளது. இது திருவாவடுதுறை ஆதீனத்துக்குச்சொந்தமானது சூரியன் நடுவிலும், ஏனையகிரகங்கள் அது அதற்குரிய இடங்களிலும் அமைக்கப் பட்டுத் தனிக்கோயிலாய் விளங்குவது. நவக்கிரகங்களுக்குத் தமிழ்நாட்டிலேயே தனிக்கோயிலாக விளங்குவது இது ஒன்றேயாகும்.

கோயில் (சிதம்பரம்)

நடராஜர்

மடித்தாடு மடிமைக்க ணன்றியே
    மனனே நீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கில்
    இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்திற் றமருகமு
    மெரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
    பெருமானைப் பெற்றா மன்றே.

— சுந்தரமூர்த்திசுவாமிகள்.

இது சென்னை திருச்சி ரயில்மார்க்கத்தில் உள்ளது. ரயில் நிலையத்துக்கு மேற்கே ஒருகல் தொலைவில் உள்ளது.

இது பூலோக கயிலாயம் எனப்படும் புண்ணிய பூமி. தரிசிக்க முத்தியளிக்கும் தலம். பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற முனிவர்கட்காகச் சபாநாதர் ஐந்து சபைகளுள் ஒன்ருகிய கனகசபையிலே எக்காலமும் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் பதி. பஞ்சபூத தலங்களுள் ஆகாயத்தலம் "தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவர்கள்" பூசிக்குந் திவ்விய தலம்.

மாணிக்கவாசகர் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடியருளின பழம்பதி. சேரமான்பெருமாள் நாயஞர் பொன்வண்ணத்தந்தாதி பாடின திருப்பதி. சபாநாதருடைய திருவடிகளே நமக்குப் பெருந்துணை என்று நம்பிப் பூசித்துவந்த அச்சேரமான்பெருமாள் நாயஞருக்கு, அவர் பூஜைமுடிவிலே தம்முடைய திருச்சிலம்பொலிக் கேட்பித்தருளினர்.

அபயகுல சேகர சோழமன்னனின் காலத்திலே நம்பியாண்டார் நம்பியால் தேவாரத் திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட திருத்தலம். அநபாயசோழன் காலத்தில் சேக்கிழார்நாயஞர் திருத்தொண்டர் புராணம்பாடி அரங்கேற்றிய திருப்பதி.

மற்ற எல்லாச் சிவத்தலங்களிலுமுள்ள சிவகலைகள் அனைத்தும் அர்த்தயாமத்தில் தன்னிடத்தில் வந்து சேரப்பெற்ற ஒப்புயர்வில்லாத தலம். இதுபோன்ற இன்னும்பல பெருமைகளையும் உடையது.

கோயில் மிகப்பெரியது. நான்கு புறங்களிலும் கோபுரங்கள் உள்ளன, சிவகங்கைத் தீர்த்தம் கோயி

லுக்குள் வடகிழக்கில் உள்ளது. நடராஜப்பெருமான் சந்நிதியில் ரத்தின சபாபதி அபிஷேகம், ரஹஸ்ய தரிசினம் முதலியன தரிசிக்கற்பாலன. தேவியார்சந்நிதி தனியாகவிருக்கிறது. கனகசபைக்குத் தென்மேல்பால் கோவிந்தராஜப்பெருமாள் பள்ளிகொண்டிருக்கிறார். ராஜசபை என்னும் ஆயிரக்கால் மண்டபம் விசேஷ சிறப்புடையது. இத்தலத்துக்கு மூன்று புராணங்கள் உண்டு.

சீகாழி

வடுகன்

மேலையோர் கற்பத் திறுதியிற் கதிர்கள்
மேவுடுக் கணங்கள் கீழுறத்தீம்
பாலையொத் திடுசங் கீன்றமுத் தினங்கள்
பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியந் தோணி
விளங்கிடு வடுகனுங் கடவுள்
காலைமென் போதை யுச்சியிற் கொள்வாம்
கடுந்துயர் மாலைதீர்ந் திடவே.

இத்தலம் புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கே ஒரு கல் தொலைவிலுள்ளது. எட்டு வீதிகளுடையது. திருஞானசம்பந்தர் திரு அவதாரஞ்செய்த தலம். கணநாதர் வசித்திருந்த தலம். பிரமன் வழிபட்டதால் பிரமபுரம் எனவும். தேவர்கள் புகலிடமாகப் புகுந்ததால் புகலி எனவும், பிரளயகாலத்தில் தோணிபோல் மிதந்த காரணத்தால் தோணிபுரம் எனவும் இத்தலத்துக்குப் பெயர் வந்துள்ளன.

இங்குத் திருஞானசம்பந்தருக்குத் தனி ஆலயம் இருக்கிறது. அவர் ஞானப்பாலுண்ட குளம் அம்மன்

சந்நிதிக்கு எதிரில் இருக்கின்றது. கோயிலுக்குள் மலைக்கோயில் உச்சியில் சட்டைநாதர் ஆலயமும், அதற்கு அடுத்தக் கீழ்நிலையில் தோணியப்பர் சந்நிதியும் இருக்கின்றன. பைரவர் கோயில் வடக்குவீதியும் மேலவீதியும் சந்திக்கும் இடத்தில் தனிக்கோயிலாக உள்ளது.

திருவாவடுதுறை

திருநந்திதேவர்

முழுதுலகு நிறைபிரமம் பரமனே
யெனமறைகள் மொழியுந் தன்மை
வழுதியின்பால் முதுகிலடி படுபொழுதிற்
கண்டிருந்தும் மயங்கு வோர்க்குக்
குழுவுறுமால் விரிஞ்சன்முதல் வானவர்மேல்
கைப்பிரம்பு கொண்டு தாக்கிச்
செழுமணித்தண் கயிலையின்பால் தெளிவிக்கு
மவன்மலர்த்தாள் சிரத்திற் கொள்வாம்.

இத்தலம் நாரசிங்கன்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே ஒன்றரைக்கல் தொலைவில் உள்ளது.

திருமூல நாயனர் படரரசின் கீழிருந்து யோகு செய்து ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் திருப்பாடல்களால் திருமந்திரம் என்னும் அரிய நூலைச் செய்தருளிய தலம். கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் திருமூலர் சந்நிதியிருக்கின்றது. திருவிசைப்பா பாடி அருளிய திருமாளிகைத்தேவர் வாழ்ந்த பதி.

சிவபெருமான் சொர்ணத் தியாகர். திருஞான சம்பந்தர் தம்முடைய தந்தையார் யாகம் செய்யும்

பொருட்டு "இதுவோ எமையாளுமாறு ஈவதொன் றெமக்கில்லையே. அதுவோ உனதின்னருள் ஆவடு துறையரனே" எனவரும் பதிகம்பாடிப் பொற்கிழிப் பெற்ற தலம். இதனைத் திருநாவுக்கரசர்,

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல
ஊரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு
துறைய னாரே"

என்று பாராட்டி உள்ளார்.

தல விநாயகர் அழகிய விநாயகர் என்று பெயர் பெற்றுள்ளார். பசு வடிவுடன் உமா தேவியார் பூஜித்த காரணத்தால் ஆவடுதுறை என்ற பெயர் வந்தது. காவிரியாறு ஊருக்கு வடக்கே ஓடுகிறது.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் சமய சம்பந்தமான சாத்திர, தோத்திர, இலக்கண, இலக்கிய நூல்கள் வெளியிட்டுத் தமிழையும், சைவத்தையும் புரந்துவருவது உலகம் அறிந்த ஒன்று. சைவ சமய சம்பந்தமான பதினெட்டு திருமடங்களுள் இது சுத்தாத்துவித சைவசித்தாந்தத் தலைமையான மடம் உள்ள இடம்.

திருவாரூர்

சோமாஸ்கந்தர்

உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி

அயிரா வணமேறு தானே றேறி
அமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணா னோக்காதா ரல்லா தாரே.

— திருநாவுக்கரசர்.

பஞ்சபூத தலங்களுள் இது பிருதிவித் தலம். விராட்புருடனுடைய மூலாதாரஸ்தலம். 'நிறைசெல்வத் திருவாரூர்' எனப்படும் இவ்வூர் ஆலயத்துக்குத் திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் பெயர். இலக்குமி பூசித்த தலம். பிறக்க முத்தியளிக்கும் திருப்பதி.

சோழநாட்டுத் தலைநகரங்கள் ஐந்தனுள் ஒன்று. மனுநீதிச்சோழன் ஆண்ட தலைநகரம். தேவாரத் திருமுறைகள் முழுவதையும் செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்த அபயகுலசேகர சோழரும், பெரிய புராணம் பாடச்செய்த அநபாய சோழரும் இருந்து அரசாண்ட பழம்பதி.

சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை அருளிச்செய்த தேவாசிரியன் என்னும் ஆயிரக்கால் மண்டபத்தையும், அவர் விருத்தாசலத்தில் மணிமுத் தாற்றில் இட்ட பொன்னைப் பரவையாருக்கு எடுத்துக் கொடுத்த கமலாலயம் என்னும் திருக்குளத்தையும் உடைய தலம். சுந்தரர் பொருட்டுத் தியாகேசர் நள்ளிருளில் பரவையாரிடம் தூதுசென்ற பழம்பதி. காஞ்சிபுரத்தில் ஒரு கண் பார்வைபெற்ற சுந்தரர் "மீளா அடிமை" என்னும் திருப்பதிகம்பாடி மற்றொரு கண் பார்வையும் பெற்ற தலம். சப்த விடங்கத் தலங் களுள் முதன்மையான தலம். வீதிவிடங்கர். அசபா நடனம்.

முசுகுந்தச் சக்ரவர்த்தி தேவலோகத்திலிருந்து கொணர்ந்த தியாகேசப்பெருமானுக்குத் திரு அந்திக் காப்பு (சாயங்காலப்பூஜை) தொன்றுதொட்டு செய்யப் பெற்றதால், திருவந்திக்காப்பழகர் என்னும் பெயர் போந்தது.

திருவாரூர்த் தேரழகு என ஒரு உலக வழக்கு உள்ளது. திருவாரூரில் கோயில், குளம், செங்கழு நீரோடை இவை ஒவ்வொன்றும் ஐயைந்து வேலிகள் என்பர். 'அஞ்சணை வேலியாரூர் ஆதரித்திடங் கொண்டாரே' தேவாரம்.

கோயில் மிகவும் பெரியது. கோயிலுள் வெளிப் பிரகாரத்தில் அநேக இலிங்கங்கள் சிறு ஆலயங்களில் இருக்கின்றன. ஆடகேச்சுரம் என்னும் ஆலயமும் கோயிலுக்குள் இருக்கின்றது. அதில் பிலம் ஒன்று கல்லினால் மூடப்பட்டிருக்கின்றது. இது புற்றிடங் கொண்டார் கோயிலுக்குத் தென்கீழ்த்திசையில் இருக் கின்றது. இதற்கு நாகபிலம் என்று பெயர். அதில் எழுந்தருளியுள்ள ஆடகேசரைத்தரிசித்துப் பூமியி லுள்ளோர் எல்லோரும் சுவர்க்கலோகத்தை அடைந் தமையால், அவ்வுலகத்தில் இடமில்லாமற்போனதை உணர்ந்த இந்திரன் அரதன சிருங்கம் என்கிற மலை யொன்றால் பிலத்தை அடைத்தான் என்பது புராண வரலாறு.

நீலோற்பலாம்பாள் அல்லது அல்லியங்கோதை என்பது அம்மையின் பெயர். கமலாம்பாள் சந்நிதி தனியாக மேற்குக் கோபுரத்துக்குச் சமீபத்தில் இருக் கின்றது. கமலாலயம் என்னும் திருக்குளத்தின் ஈசான மூலையில் மாற்றுரைத்த பிள்ளையார் ஆலயம் இருக்கின்றது. தெற்குக் கோபுரத்துக்கு அருகில் பரவை நாச்சியார் கோயில் இருக்கின்றது. மனுச்

சோழன் மகன் தேர் ஏறிச்சென்றதும். பசுவின் கன்று இறந்ததும் தனது மகன்மீது சோழன் தேரூர்ந்தது மான குறிப்புகளைக் காட்டக் கல்லினால் தேர் முதலிய செய்யப்பட்டிருப்பதைக் கிழக்குக் கோபுரத்துக்கு அப் பாற்காணலாம்.

கமலாலய தீர்த்தம் கோயிலுக்கு மேற்கில் உள்ளது. கமலாலயத்தின் நடுவில் ஒரு சிறு கோயில் இருக் கின்றது. தேவாசிரிய மண்டபம் இப்போது ஆயிரக் கால் மண்டபம் என்று வழங்கப்படுகிறது. இது சோமாஸ்கந்த தலம்.

(இரும்பூளை) திருவாலங்குடி

தட்சிணாமூர்த்தி

நச்சித்தெழு வீர்கண மக்கிது சொல்லீர்
கச்சிப்பொலி காமக் கொடியுடன் கூடி
யிச்சித்திரும் பூளை யிடங்கொண்ட ஈசன்
உச்சித்தலை யிற்பலி கொண்டுழ லூணே.

இத்தலம் நீடாமங்கலம் புகைவண்டி நிலையத்தி லிருந்து வடமேற்கே நாலுகல் தொலைவிலுளது. இத் தலத்து உற்சவமூர்த்தி தட்சிணாமூர்த்தி, பிள்ளையார் கலங்காமற் காத்த பிள்ளையார். விசுவாமித்திரர் முதலி யோர் பூசித்த தலம். காசி ஆரண்ய மகாத்மியம் என் னும் தட்சிணாமூர்த்தித் தலமாகிய ஆலங்குடி புராண மும் உள்ளது. இது இரும்பூளை என்னும் திருப்பெ யருடைய தலம். குரு விசேடமாக உள்ள தலம்.

இவ்வொன்பது தலங்களும் மூகாம்பிகை சந்நிதி யில் ஓவிய வடிவமாகத் தீட்டப்பட்டு இத்தலத்தில் விளங்குகின்றன. இவ்வொன்பது தலங்களையும் ஒரே

நாளில் முறையாக வழிபட்டு இத்தலத்தை அடைவோர் இருமைப் பயனையும் ஒருசேரப் பெற்றுப் பெரும்பயன் அடைவர் என்பது உறுதி.

தல விசேடம்

இந்தத் தலத்தைப்பற்றிக் கந்தபுராணம், இலிங்க புராணம், பிரமகைவர்த்தம், சிவரகசியமாகிய பழமை யான புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இத்தலத்தை முறைப்படி வழிபடுபவர்கள் சித்தப்பிரமை நீங்கி நலம் பெற்றுச் செல்லுதல் இன்றுங் கண்கூடு.

தீர்த்தங்கள்

காருணியாமிருததீர்த்தம் முதல் கலியாணதீர்த்தம் ஈருக 32 தீர்த்தங்கள் உள்ளன. கலியாணதீர்த்தம் என்பது காவிரித்துறை. இத்தீர்த்தத்தில் தைப்பூசத் தன்று நீராடுவோர் சகல பாவங்களினின்றும் விடுதலை பெற்று எல்லாவித நலன்களும் பெற்று உய்வார்கள்.

நிருவாகம்

இக்கோயிலின் நிருவாகம் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய 22-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் சிறந்த முறையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. பத்து இலட்சத்துக்குமேல் செலவிட்டுத் திருப்பணிகள் செய்யத்திட்டமிடப்பட்டு, ராஜகோ புரங்கள், திருச்சுற்றுமதில்கள், பிரகாரங்கள் முதலிய யாவும் புதுப்பிக்கப்பட்டு 15–7—1970-ல் மஹா கும்பாபிஷேகம், சிறப்புற நடத்திய நிலையினை சைவ நன்மக்கள் நன்கறிவர்.

ஆலய நிர்வாகத்திலுள்ள நூல்நிலையத்தில் ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய நானூறுக்கு மேற்பட்ட சுவடிகளும், பல அரிய தமிழ் நூல்களும் சேர்த்துவைக்கப்பட்டும் புதிதாகக் கட்டப்பட்ட நூல் நிலையக் கட்டிடத்தில் நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. நூல்நிலையக் கட்டிடத்தை அடுத்துச் சமயப்பிரசார மண்டபம் அழகிய முறையில் எல்லாவசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. பிரசார மண்டபத்தில் சைவ சமயாசாரியார் நால்வர் திருவுருவமும், திருமுறைக் கோயிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

திருக்கோயிலும் தீர்த்தமும் சேர்ந்து கோயில் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு உடையதாக விளங்குகிறது. இக்கோயிலுக்குச் சொந்தமாக நஞ்சை நிலங்கள் சுமார் 1816 ஏக்கரும், புஞ்சை நிலங்கள் சுமார் 795 ஏக்கரும், மனைக்கட்டுகள் சுமார் 64 ஏக்கரும் குளங்களும் ஆக கூடுதல் 2674 ஏக்கர்கள் நஞ்சை புஞ்சை நிலங்களாக இருக்கின்றன.

கோயிலின் பூஜைமுறைச் சிறப்பு

இந்தக்கோயிலில் திருவனந்தல் முதல் ஆறுகால பூஜைகள் நாள்தோறும் நடைபெறுகின்றன. ஏக நாயகருக்குத் தனிப்பட்ட முறையில் விசேட பூஜை ஒவ்வொருநாளும் நடைபெறுகிறது. இவையேயன்றி தைப்பூசப் பெருவிழா, வைகாசி வசந்த விழா, அறுபத்துமூவர் விழா, ஆகிய இவைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. பன்னிருதிருமுறைகளும் இக்கோயிலில் ஆண்டுதோறும் ஐந்து மாதங்கட்கு மேலாக முறையாகப் பாராயணஞ் செய்யப்பட்டுவந்து, இவ்வாறு பன்னிரு ஆண்டுகள் குறைவில்லாது நடந்து நிறை

வெய்தியது. இவைகளேயன்றி ஏனைய சிறப்புக்களும் ஏற்புடைய முறையில் நடைபெற்றுவருகின்றன.

கோயிலுக்கென்று சொந்தமாக 1008 சங்குகள் வாங்கப்பட்டுள்ளன. அவைகளைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத்து நான்கு சோம வாரங்களிலும் சிறப்பாகச் சங்காபிஷேகம் நடத்தப் பட்டு வருகின்றன. நூல் நிலையத்தில் உள்ள பழம் பெரும் நூல்களின் துணைகொண்டு இது வரை நாற்பத்திநான்கு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சரித்திரச் சிறப்புக்கள்

இத்தலத்தில் பழமையான 159 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளுள் ஒன்று இக்கோயிலில் நாடக சாலை இருந்ததாகக் குறிப்பிடுகிறது. நாடக ஆசிரியன் ஒருவேலி நிலம் தானம் பெற்றுள்ளதாக அந்தக் கல்வெட்டில் காணப்படுகின்றது.

தல அமைப்பு

இத்தலம் கிழக்கே பாணபுரத்தையும், தெற்கே திருநிலக் குடியையும், மேற்கே திருபுவனத்தையும், வடக்கே காவிரி ஆற்றையும் தனக்கு எல்லைகளாகக் கொண்டு நடுநாயகமாக விளங்குகின்றது.

கல்விப்பணி

நகரில் தொடக்கப்பள்ளி மூன்றும், உயர்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளன. இந்தப்பள்ளிகளின் உரிமைகள் யாவும் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமாக உள்ளன. கல்வி நிலையங்கள் யாவும் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன.

வழிபட்டோர்

உரோமசமுனிவர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். பட்டினத்தார், பத்திரகிரியார் தங்கி வழிபட்ட தலம். வரகுணபாண்டியர் வழிபட்டுப் பிரமகத்தித்தோடம் நீங்கப்பெற்ற திருத்தலம்.

பட்டினத்தார் வழிபட்டது

இறைவர் குபேரனுடன் பல தலங்கட்குஞ்சென்று காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தார். குபேரன் அத் தலத்துத் தங்க விரும்பியது கண்டு இறைவர் அங்கு பிறக்குமாறு அருள்செய்தார். குபேரன் இறைவர் கூறியருளியதைக் கேட்டு அடியேனைத்தடுத்து ஆட் கொள்ள வேண்டும் என வேண்டிக்கொண்டான். சிவபிரானும் அவ்வாறே அருள்புரிந்து திருக்கயிலை அடைந்தார். இறைவர் கட்டளைப்படிக் குபேரன் அப் பட்டணத்தில் சிவநேசருக்குப் புதல்வராகத்தோன்றித் திருவெண்காடர் என்ற பெயருடன் திகழலானன்.

திருவெண்காடர் உரிய பருவம் வந்ததும் சிவகலை என்னும் நங்கையை மணந்து அவருடன் இல்லற வாழ்க்கையை நல்லற வாழ்க்கையாக நடத்தினர். அவர்களது வாழ்க்கையில் மக்கட்பேறு இல்லாதது பெருங்குறையாக இருந்தது. இருவரும் இறைவர்பால் வேண்டிக் குறையிரக்கலானர்கள்.

இவ்வாறு இவர்கள் இன்னலுறுவதைப் போக்க இடைமருதீசர் எண்ணினர். இறைவர் ஒருநாள் வில்வத்தடியில் குழந்தை வடிவாய்க்கிடந்தார். அக் கோயில் சிவாசாரியாராகிய சிவசருமர் அக்குழந் தையை எடுத்தார். மனைவிபால்கொடுத்தார். இருவரும் தங்கள் வறுமையை இந்தக் குழந்தைமூலம் போக்க

எண்ணிக் குழந்தையைக் காவிரிப்பூம்பட்டினம் எடுத்துச் சென்றனர். திருவெண்காடர் அக்குழந்தையின் எடை அளவுப் பொன்கொடுத்து அக்குழந்தையைப் பெற்ருர். மருதவாணர் என்று பெயருஞ் சூட்டினுர்.

அக்குழந்தை ஒருநாள் பெட்டி ஒன்றை வைத்து மறைந்தது. வெண்காடர் பெட்டியைப்பார்க்க அதில் காதற்ற ஊசியும் ஓலையும் இருந்தது. அதைக்கண்டு அடிகள் மனத்துறவு பெற்றுப் பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரை அடைந்தார். கீழைக் கோபுரவாயிலில் தங்கினுர். பின் வடக்குநோக்கிச் சென்ருர். பத்திரகிரியார் என்ற அரசர் இவருக்குச் சீடரானுர். அவருடன் மீண்டும் திருவிடைமருதூரை அடைந்தார். பத்திரகிரியார் வெண்காடரருளால் சிவஞானம் கைவரப்பெற்றுத் திருவருட் சோதியில் கலந்தார். அடிகளார் ‘ கரும்பு கைக்குந்தலம் ’ உனக்கு அருள் செய்யும் தலம் என அசரீரி கூற வெளிப்போந்து திருவொற்றியூரையடைந்து சிவத்துடன் இரண்டறக் கலந்தார்.

பத்திரகிரியார்

பத்திரகிரியார் உஜ்ஜயினி நாட்டு அரசர். வடக்கு நோக்கிச் சென்ற பட்டினத்தடிகள் உஜ்ஜயினி நாட்டில் உள்ள காட்டில் பிள்ளையார் கோயிலில் நிட்டைகூடி இருந்தார். அந்தச்சமயம் அரண்மனையில் கொள்ளையிடச் சென்ற கள்ளர்கள் “ விநாயகரே ! எமக்குப் பொருள் அகப்படின் உமக்கு முத்தாரம் சாத்துகிறோம் என்று கூறிச் சென்ருர்கள். கள்ளர்கட்குப் பெரும் பொருள் கிடைத்தது. திரும்புங்கால் வாக்குத் தவருது முத்துமாலையை விநாயகர்மேல் எறிந்தார்கள். அம் மாலை பட்டினத்தார் கழுத்தில் விழுந்தது.

பட்டினத்தார் நிட்டை கலைந்து வெளியே வந்தார். முத்துமாலையைக் கண்ட காவலர்கள் அவரைக் கள்வர் என்றுபற்றிச் சென்றார்கள். அரசரிடம் விட்டார்கள். அரசர் அவரைக் கழுவிலேற்றுமாறு உத்தரவிட்டுத் தாமும் உடன்சென்றார். அடிகள் இறைவரைத் துதித்துக் கழுமரத்தைநோக்கக் கழுமரம் எரிந்தது. அரசர் அந்த நிகழ்ச்சியைக்கண்டு அஞ்சினர். அடிகளுக்கு அடிமைபூண்டார். உடன் துறவுபூண்டு அடிகளுடன் சென்று பிச்சை எடுக்கலானார். இவருடன் சிவயோகி ஒருவர் நாயுருக்கொண்டு அலைந்தவர் தொடரலானார். பத்திரகிரியார் அந்நாய்க்கும் சோறளித்துவந்தார்.

இருவரும் திருவிடைமருதூருக்கு வந்தார்கள். இறைவர் அடியார் உருக்கொண்டு பட்டினத்தாரிடம் வந்து பிச்சைகேட்டார். அடிகள் மேலைக் கோபுரத்தில் பத்திரகிரி என்ற சமுசாரி உள்ளான் அவன்பால் செல்க என்றார். இறைவரும் அவர்பால் அடிகள் சொல்லியதைத் தெரிவித்துப் பிச்சைகேட்டார். பத்திரகிரியார் இவ்வோடும் நாயுமல்லவோ என்னைச் சமுசாரி ஆக்கியது என்று கூறி ஓட்டை நாயின்மீது எறிந்தார். உடன் நாய் உயிர் நீங்கிக் காசிராசன் மகளாகி அந்தப் பத்திரகிரியாரை அடைந்தது. பத்திரகிரியார் உடனே அப்பெண்ணுடன் தன் குருவையடைந்து பணிந்தார். மூவரும் உட்சென்று சோதியைக்கண்டு பணிந்தார்கள். பத்திரகிரியாரும் அந்தப் பெண்ணும் சோதியுட் கலந்தார்கள். பட்டினத்தார் இறையருளை எண்ணி வியக்கலானார்.

தலவரலாற்றுப் படங்கள்

திருக்கோயிலில் விளங்கும் பெரிய நந்திக்கு மேல் பால் உள்ள இரு சுவர்களிலும் இத்தல சம்பந்தமான

புராணவரலாறுகள் யாவும் விளக்கமாகப் படங்களாக எழுதப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

நூல்கள்

இத்தல சம்பந்தமாக இரண்டு புராணங்கள் உள்ளன. அவையேயன்றிப் பட்டினத்தார் பாடிய நூல் ஒன்றும் உண்டு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று விசேடங்களும் உடையது இத்தலம்.

புராண வரலாறும் தல விசேடமும்

நாட்டிடை விளங்கும் காசி முதலிய சிறந்த தலங்களுள் திருவிடைமருதூரும் ஒன்று. இத்தலம் பன்னிரண்டு திருப்பெயர்களை உடையது. இது உமையம்மையின் இருதய கமலம் போல் விளங்குவது. அர்ஜுனம் - மருதமரம். மருதமரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட தலங்கள் வடக்கே மல்லிகார்ஜுனமும் தெற்கே திருப்புடைமருதூர் என வழங்கும் புடார்ஜுனமும், நடுவிலே இத்தலமும் விளங்குவதால் இது மத்யார்ஜுனம் எனவும் இடைமருது எனவும் வழங்கப் பெறும். இத்தலத்தை யடைந்து வழிபட்டால் நவக்கிரக இன்னல்கள் நலிவுபெறும். பூதம், பிசாசம் பீடிக்காது. உமை பூசித்துப் பேறுபெற்ற தலம். இவ்வாறு முருகப்பெருமான் முனிவர்கட்கு இத்தலப் பெருமையைக் கூறியருளினர்.

உமை தவஞ்செய்தல்

அகத்தியர் முனிவர்களோடு இடைமருதையடைந்தார். உமாதேவியை நினைந்து சண்பகச்சோலையில் தவஞ்செய்யத் தொடங்கினர். இறைவனது ஆணையின் வண்ணம் உமையம்மை முனிவர்கட்குக் காட்சி

கொடுத்தருளினர் முனிவர்கள் முறைப்படி இறை வியை வழிபட்டு இறைவரும் காட்சி கொடுக்க அருள் செய்ய வேண்டுமென்று குறையிரந்தார்கள். உமை யம்மை இறைவரை எண்ணிச் சிவோகம்பாவனையில் இருந்தார். இந்தத் திருவுருவே மூகாம்பிகை என்பது. இறைவர் தவத்திற்கு இரங்கி உமையம்மைக்கு இருதய கமலத்தும், முனிவர்கட்கு வெளிப்படையாகவும்காட்சி கொடுத்து ஏகநாயகராயினர்.

இறைவர் பூஜை

உமைக்கு வரமருளிய பின்னர் இறைவர் சோதி இலிங்கத்தைப் பூஜிக்கும் பொருட்டுச் சென்றனர். தேவர்கள் எல்லாம் பூசைப்பொருள்களை ஏந்தி நின் ருர்கள். இறைவர் முறைப்படி பூசைசெய்து தேவர் கட்கு வரம் நல்கினுர். உமை இறைவரைப் பார்த்துப் பெருமானே! பிரமன் முதலிய தேவர்கள் உம்மைப் பூசிப்பதன்ருே முறை; அவ்வாருக இந்த மூர்த்தி யிடத்து எவரைப் பூசித்தீர்கள் என்று வினவினுள். அதனைக் கேட்ட இறைவர் உமையே! பூசித்தோனும், பூசனையை ஏற்றுக்கொண்ட பரம்பொருளும் நாமே; நம்மை நாமே பூசிப்பதற்குக் காரணம் என்னையோ? என்ருல் இம்முனிவர்கள் நம்மைப் பூசித்தலை மறந்த னர். அவர்கள் அதனை அறிந்து கோடற்பொருட்டே யாம் என்றனர். அன்று தொடங்கி இப்பெருமானைக் காமிகாகம விதிப்படி பூசைசெய்து பேறுபெறுவா ராயினர். இன்றும் ஐந்தாந்திருவிழா அன்று தம்மைத் தாம் அர்ச்சித்தல் இத்தலத்தில் நடைபெறுகின்றது.

உரோமசர் அருள்பெறல்

உரோமச முனிவர் விட்டின்பத்தை அடைய எண்ணித் தவத்தோர்பலருடன் சிவதல யாத்திரை

சென்றார். பல தீர்த்தங்களில் ஆடிக் காவிரியில் முழுகினார். இடைமருதூரை அணுகினார். அவ்வமயம் இடைமருதூரில் உள்ள கனகதீர்த்தத்திலே காகமானது முழுகி எழுவதைக் கண்டார். எழுந்தவுடன் அது மருதமரத்தில் உட்கார்ந்தது. தன் கரியவடிவம் நீங்கிப் பொன்வடிவம் ஆயிற்று. ஆச்சரியமடைந்தது. இறைவன் அருளால் பொன்விமானம் தோன்றியது. காகம் உருத்திர வடிவம்பெற்று விமானத்தில் ஏறிக் கயிலையை அடைந்தது.

இக்காட்சியை உரோமசர்கண்டார். திருக்கோயிலை அடைந்தார். சமணம் மேலோங்கிச் சைவம் குன்றிய நிலையில் விநாயகர் இறைவரைப் பூசித்துவந்தார். உரோமசமுனிவர் விநாயகர் அருள் பெற்று உய்ய எண்ணினார். உரோமசருக்கு அருளிய விநாயகர் ஆண்டவிநாயகர் எனப்பட்டார். உரோமசர் மருதவனத்தையே கயிலாயமாக எண்ணினார். கோயிலின் வடபால் ஒரு பர்ணசாலை ஏற்படுத்தினார். முப்போதும் காவிரியாடி சிவாகமவிதி வழுவாமல் சிறப்பாகப் பூசை செய்து வருவாராயினர். பெருமானே! தேவரீர் இந்தத் தலத்தில் இக்கோலத்திலேயே இருத்தல் வேண்டும் சைவநெறியும் வைதிகநெறியும் தழைத்தோங்கவேண்டும் என்று வேண்டினார். இறைவரும் அவ்வாறே வரந்தந்து சிலநாட்களில் சோழன் ஒருவன் வருவான் அவன் இதனைச் சிறந்த நகரமாக்குவான் என்று கூறி அருளினார்.

அவ்வாறே சோழன்வந்து முனிவரை வணங்கினான். முனிவர் அவனுக்கு வீரசோழன் என்று பட்டம் கட்டினார். முனிவர் சோழனை அழைத்துக் கொண்டு திருக்கோயிலை அடைந்தார். அரசனே ! நீ இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்க என்றார்.

வீரசோழன் காடு கெடுத்து நாடாக்குவித்தான். நகரம் சமைத்தான். திருப்பணிகள் பலவும் செய்வித்தான். திருவிழா நடத்த எண்ணினன். முனிவரைக் கேட்டான். முனிவர் அரசனைநோக்கித் தைமாசத்துப் பூசநாளைத் தீர்த்த நாளாகக்கொண்டு விழாச்செய்க. அப்பூச நாளும் தை மாதத்திலே வியாழக்கிழமையில் பூரணத்திதியில் ஒத்துவருமாயின் உத்தமமாகும். அதுவும் இப்போதுள்ளதாம் ஆதலின் திருவிழாவைச் சிறப்புறச்செய்க என்ருர். அரசனும் திருவிழாவைச் செய்து முத்திபெற்ருன்.

மார்க்கண்டேயர் வழிபட்டது

மார்க்கண்டேய முனிவர் தவத்தில் மேம்பட்டவர். திருக்கடவூரில் அமுத கடேசரை வழிபட்டுக் காலனைத் தடிந்திடச் செய்தவர். அதனுல் இறைவனுல் என்றும் பதினறு என்னும் பெருவாழ்வையும் பெற்றவர். மார்க்கண்டர் உமையொரு கூறுடைய திருமேனியைத் தரிசிக்கத்தவம் கிடந்தார். எங்கும் காணப்பெருது இடைமருதை அடைந்தார். இறைவர் அவரது தவத்திற்கிரங்கி உமையொரு கூறராகக் காட்சி யளித்தார். காட்சியைக் கண்டமுனிவர்,

நீலமார் மிடற்ருய் பவளமால் வடிவின்
நீறணி நிருத்தனே போற்றி
வேலினை நிகர்க்கும் விழியுமை ஒருபால்
விளங்கவந்து எளியனேன் காணப்
பாலும்இன் சுவையும் வேறுவே றிருக்கும்
பரிசென நின்றனே போற்றி
ஏலுமெய் யன்பர்க்கு எளியனே பொழில்சூழ்
இடைமருது இறைவனே போற்றி.

இவ்வாறு பாடித்துதித்தார். இறைவரும் மனமுவந்து நீ கருதியவரம்கேள் என மார்க்கண்டேயரும் எனக்கு இதுபொழுது காட்சி தந்து அருளியது போல வந்து வழிபடும் அன்பர்கள் அனைவருக்கும் நற்பதம் அருளுக என்று வேண்டினர். இறைவரும் அவ்வாறே ஆருக என்றருள்செய்தார்.

சுகீர்த்தி வழிபட்டது

காஞ்சிபுரத்தில் சுகீர்த்தி மன்னவன் அரசாண்டான். மகப்பேறுவேண்டி அகத்தியரை வழிபட்டான். நீ திருவிடைமருதூர் அடைந்து இறைவனை வழிபாடு செய், புத்திரப் பேறடைவாய் என்ருர். சுகீர்த்தியும் அகத்தியரை வணங்கி விடைபெற்ருன். இடைமருதை அடைந்தான். காவிரி படிந்தான். மகாலிங்கேசரை வழிபட்டான். பிதிர்க்கள் பூசையை விதிப்படி செய்தான். அதன்பயனுகப் புதல்வரைப்பெற்ருன். கோயிலில் பல திருப்பணிகள் செய்து முடிவில் சிவபதமடைந்தான்.

காசிபர் அருள் பெறல்

காசிபர் திருமால் ஆயர் சேரியில் குழந்தையாக விளையாடிய கோலத்தைக்காண விழைந்தார். நீண்ட நாள் எண்ணியும் கிட்டவில்லை. இடைமருதை அடைந்தார். தவங்கிடந்தார். இறைவரும் குழவி வடிவினராய் காட்சி அளித்தார். எழுந்தார். வணங்கினர். கண்ணபிரான் அருளியபடி காசியபர் இடைமருதீசனை வழிபடலானுர். பிரணவப் பிரகாரத்தில் தல விருட்சத்துக்கடியில் காசிபர் வழிபட்ட கண்ணன் இன்றும் எழுந்தருளி உள்ளார்,

இதேபோன்று வசிட்டர் முதலிய முனிவர்களும் திருவிடைமருதூரை அடைந்தார்கள். நாடோறும்

தவருது மகாலிங்கத்தைப் பூசித்து எல்லா நலங்களும் பெற்றூர்கள். முருகப்பெருமானும் இறைவனைவழிபட்டு இத்தலத்தில் கயிலேக்காட்சியைக் கண்டார்.

தீர்த்தச் சிறப்பு

இத்தலத்திலுள்ள தீர்த்தங்கள் ஆடுவோர் கங்கையாதிய பயனைக்காட்டிலும் மேலானபலனைப் பெறுவார்கள். சிறப்பாகக் கலியாண தீர்த்தம் ஐராவத தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன. அவைகளும் ஆடுவோர் பாவத்தைப் போக்குவனவாம்.

தலத்திலுள்ள தீர்த்தங்கள்

காருண்யாமிர்ததீர்த்தம்

இத்தலத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் இது மிகச்சிறந்தது. இத்தீர்த்தத்தில் சித்திரை விஷு புண்ணிய காலத்தில் நீராடினல் பெரும் சிறப்படையலாம். மேலும் உலகங்களில் உள்ள எல்லாப்புண்ணிய நதிகளிலும் நீராடிய பலனை இத்தீர்த்தம் ஒன்றுமே எளிதில் கொடுக்கும். கங்கைமுதலிய நதிகள். "எங்கள்பால் பாவஞ்செய்தோர் நீராட அப்பாவத்தை நாங்கள் ஏற்று மெலிவடைந்துள்ளோம். அதனைப் போக்கும் வழியை அருளவேண்டும்" என் ஆண்டவனை வேண்ட, அவனும் இக்காருண்யாமிருத தீர்த்தத்தைக் குறிப்பிட்டு அருள் செய்தார். அவ்வாறு அவர்கள் ஆடி அருள்பெற்ற தினமே சித்திரை விஷு ஆகும். இத்தீர்த்தம் கோயிலின் கீழ்பால் அமைந்துள்ளது.

பாணதீர்த்தம்

இத்தலத்திற்குக் கிழக்கு எல்லையாக அமைந்த பாணுபுரத்தில், தலத்திற்கு வடகீழ்த்திசையில் அமைந்

துள்ளது. இத்தீர்த்தத்தை அமைத்தோர் இராமர். இத்தீர்த்தத்தில் வைகாசிமாத பௌர்ணமியில் நீராடுதல் சிறப்பாம். இதில் நீராடுமுன் பால், தயிர், நெய் இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இராமன் இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டு அர்ச்சிக்கத் தனது பாணத்தைப் பூமியில் பிரயோகித்துத் தீர்த்தம் உண்டாக்கினமையால் இது பாணதீர்த்த மென்று பெயர்பெற்றது. இத்தீர்த்தத்தின் வடகரையில் பாணபுரிஸ்வரர் ஆலயம் அமைந்திருக்கிறது. இவ்வாலயம் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமானது.

பராசர தீர்த்தம்

இத்தீர்த்தம் வடக்கு வீதியும் கீழ வீதியும் கூடுகின்ற இடத்தில் வழி நடப்பிற்கு வடபால் இருக்கும் பிடாரிகுளம் என்று ஊகிக்கப்படுகிறது. மார்கழி மாதத்தில் இதில் நீராடுதல் விசேஷம். பராசர முனிவர் மச்சகந்தியைச் சேர்ந்த அருவருப்பை, உரோமசமுனிவர் கூற்றுப்படி இதில் ஆடி நீங்கப் பெற்றதாகப் புராணத்தில் காணப்படுகின்றது.

சோம தீர்த்தம்

இது காருண்யாமிருத தீர்த்தத்திற்குக் கீழ்த்திசையில் உள்ளது. இதில் சோமவாரத்தில் நீராடுதல் விசேஷம். இதில் நீராடுவதால் பஞ்சமகா பாதகங்கள் நீங்கும். இது சந்திரனால் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது ஐயனார்குளமென்று வழங்குவது இத்தீர்த்தமாக இருக்கலாம்.

இச்சோமதீர்த்தம் கனக தீர்த்தத்திற்குத் தென்மேற்கில் உள்ளது. சந்திரன் இதில் ஆடித் தன் கலைகளை வளர்த்துக்கொண்டதாக வரலாறு கூறுகின்றது.

உருத்திர தீர்த்தம்

இது கருப்ப இல்லுக்குத் தெற்கேயிருப்பது. இதில் நீராடுவோர் கொடிய வியாதிகள் எல்லாம் நீங்கப் பெறுவர்.

பதும தீர்த்தம்

இது இரண்டாவது சோம தீர்த்தத்திற்குத் தென் கிழக்கில உள்ளது. இதில் நீராடுவோர் எல்லாச் செல்வங்களையும் பெறுவர். பாவங்கள் அறுவர். பலன் மிகப்பெறுவர்.

பாண்டவ தீர்த்தங்கள்

பாண்டவர்கள் ஐவரும் இத்தலத்தில் தங்கி ஐந்து தீர்த்தங்கள் தங்கள் பெயரால் உண்டாக்கி நீராடிப் பேறுபெற்றுள்ளார்கள். தீர்த்தங்கள் காணக்கூடிய நிலையில் இதுபொழுது இல்லை.

இந்திர தீர்த்தம்

இது கோயிலுக்குத் தெற்கேயிருக்கின்றது. இதில் நீராடுவோர் சகலவித தோஷங்களையும் போக்கிக் கொள்வர்.

அக்கினி தீர்த்தம்

இது இந்திர தீர்த்தத்திற்குத் தெற்கேயுள்ளது. யமதீர்த்தம், நிருதிதீர்த்தம், வருணதீர்த்தம், வாயு தீர்த்தம், குபேரதீர்த்தம், இது வடக்குவீதி அரண் மனைக்குள் இருக்கும் தடாகம் என்று சொல்லப்படு கிறது. ஈசானதீர்த்தம்.

கிருஷ்ண கூபம்

இது திருக்கோயிலுள் ஈசான திசையில் கிருஷ்ண ணல் உண்டாக்கப்பட்டது. இதில் அஷ்டமிதிதியில் நீராடுதல் விசேஷம். இதில் ஆடுவதால் பாவங்கள் நீங்கி எல்லாச் செல்வங்களையும் பெறலாம். இது இன்றும் இறைவனுக்கு அபிஷேகம்செய்ய எடுக்கும் தீர்த்தமாக விளங்கிக்கொண்டு உள்ளது.

கனக தீர்த்தம்

இது கருப்ப இல்லிற்கு வடமேற்கில் உள்ளது. இறைவன் கண்களிலிருந்து வெளிப்போந்த நீரால் நிறைந்தது. இத்தீர்த்தத்தில் காகமானது நீராடி உருத்திர வடிவம்பெற்றுச் சிவப்பேறடைந்தது.

கங்கா கூபம்

இது திருக்கோயிலுக்குள் கருப்ப இல்லிற்கு வட கிழ்த்திக்கில் உள்ளது. இந்நீரைத் தெளித்துக்கொள் வோர் எல்லாப் பாவங்களினின்றும் நீங்குவார்கள். கோயிலுக்குள் அபிஷேக தீர்த்தம்.

கருட தீர்த்தம்

திருக்கோயிலுக்கு எதிரே சிறிது தூரத்தில் உள் ளது. மற்றும் வசுதீர்த்தம், சூரியதீர்த்தம், மருத் துக்கள்தீர்த்தம், நரசிங்கதீர்த்தம், நந்திதீர்த்தம், துரோணதீர்த்தம், இராகவகூபம், சுரதீர்த்தம், முனி தீர்த்தம், இது தற்காலம் சிங்கநீர்குளம் என்று வழங்கப்பட்டு வருகிறது. சித்தப்பிரமை பிடித்தோர் இன்றும் இத்தீர்த்தத்தில் ஆடிச் சித்தப்பிரமை நீங்கப் பெறுவது கண்கூடு. கச்சபதீர்த்தம். கௌதமதீர்த்தம், கல்யாணதீர்த்தம் என்பன உள்ளன. கல்யாண தீர்த்

தம் காவிரித்துறையே யாகும். இத்துறையில் தைப் பூசத்தன்று நீராடுவோர் சகல பாபங்களினின்றும் விடுதலைபெற்று உய்வார்கள். இதுகோயிலுக்கு வடக் குத் திக்கில் உள்ளது. ஆக தீர்த்தங்கள் 32 உள்ள திருக்கோயிலாகும்.

வீரசேனன் வழிபட்டது

விரசேனன் என்பவன் பாண்டிய நாட்டு மன்னன். அவன் ஒருநாள் காட்டிற்கு வேட்டையாடச்சென்றான். அவன் செலுத்திய அம்பு, குறிதவறி மறைந்திருந்த மறையவன்மேல்பாய அவனிறந்தான். அது தெரிந்து வருந்தினான். பிரமகத்தி உடனே கரிய உருவில் வந்து அவனைப் பற்றியது. பலவாறு அவனைத் துன்புறுத் தியது. அந்தத் துன்பம் நீங்கப் புண்ணிய நதிகளில் ஆட எண்ணிச் சோழநாட்டைச் சேர்ந்தான். திரு விடைமருதூரை அடைந்தான். பூசத்துறையில் ஆடி னான். கோயிலை அடைந்தான். மருதவாணரை வழி பட உள்ளேசென்றான். பிரமகத்தியைக் கணுதிபர்கள் உள்ளே செல்லவிடாமல் தடைசெய்தார்கள். பழியும் தயங்கி வெளியே நின்றது. நீண்டநாள் இறைவரை வழிபட்டு முடிவில் முத்தியும்பெற்றான்.

சித்திரகீர்த்தி மகப்பேறு பெற்றது

பாண்டிய நாட்டரசன் சித்திரகீர்த்தி. அவன் அழகே உருவான ஒரு பெண்ணை மணந்து எல்லா நலங்களும் பெற்று வாழ்ந்தான். அவள் பெயர் சுகுணை. சுகுணை எல்லா நலங்களும் நிறையப் பெற் றும் தனக்கு மகப்பேறில்லையே என்று கவன்றாள். மன்னனுடன் சுகுணை சாபால முனிவரை அடைந்து வழிபட்டுக் குறையிரந்தாள். அம்முனிவர் கூறியபடி இருவரும் இடைமருதை அடைந்து இறைவனை வழி

பட்டார்கள். இருவருக்கும் ஏற்ற மகவு இறைவரருளால் கிட்டியது. சித்திரகீர்த்தி பங்குனித் திருநாளில் திருவிழா நடத்த ஏற்பாடுசெய்து தன் நாடு மீண்டான்.

சிவவழிபாட்டுச் சிறப்பு

துங்கபத்திரையின் ஆற்றங்கரையில் சத்தகோடி சுராலயம் என்ற ஊர் இருந்தது. அவ்வூர் அந்தணன் ஒருவன் சிவபூசையையினை முறைப்படிச் செய்பவன். உதயத்தின் முன் மலரெடுத்து இறைவரை நாள் தோறும் பூசைசெய்வது அவ்வந்தணன் வழக்கம். சிவபூசை செய்வோர் பழுதடைந்த மலரையோ பத்திரத்தையோ கொண்டு பூசைசெய்தல் கூடாது. ஒருநாள் கவனமின்றிப் பழுதடைந்த மலரைக்கொண்டு பூசை செய்துவிட்டான். புழுவெட்டிய பூவைச் சாத்தியதால் அவன் கண்ணொளியை இழந்தான். மனம் மிக வருந்தி வசிட்டமுனிவரை அடைந்து வேண்டினன். அவர் கூறியபடி திருவிடைமருதூரை அடைந்தான். கனக தீர்த்தத்தில் ஆடினன். மருதவாணரை வழிபட்டான், விழிபெற்றுன். அதனுல் அடுத்த பிறவியில் விசுவாமித்திர முனிவராய்த் தோன்றினன். தவத்தால் பிரமனிலும் மேம்பட்டவனுனன். இச்சிறப்பைச் சிவபூசையால் அவ்வந்தணன் பெற்றுன்.

வரகுணர் வழிபாடு

வரகுணன் பாண்டியநாட்டை வளமுற ஆண்டவன். அம்மன்னன் வேட்டையாடக் காட்டையடைந்தான். வேட்டையாடித் திரும்பும்போது பொழுது போயிற்று. குதிரை வேகமாக வந்தது. வருகின்ற வழியில் பிராமணன் ஒருவன் படுத்து உறங்கினன். குதிரைக்குளம்பு அவன் மார்பில் அழுந்த இறந்தான். மன்னன் அதனை அறியான். தன் மனைபுக்கான்.

பின்னர்வந்த சேனைகள் பிராமணன் இறந்ததைக் கண்டு மன்னனிடம் கூறினார்கள். அரசன் நடுங்கினன் பல தானதருமங்களைச் செய்தான். செய்தும் பிரமகத்தி மன்னனைப் பற்றியது. தன்னைப்பற்றிய பழிதீரப் பல கழுவாய்கள் செய்தான். முறையாக, கூடல் நாயகனை வலம் வந்தான்.

அவ்வாறு வலம் வருங்கால் ஒருநாள் அசரிரி! அரசன் கேட்க மன்னனே! சோழ அரசன் ஒருவன் உன்னோடு போர்செய்ய வந்து தோற்று ஓடுவான். நீயும் தொடர்ந்து அவனுடன் ஓடு. அப்பொழுது தம்மைத்தாமே அருச்சனைபுரிந்த இடைமருதை அடைவாய். அத்தலத்தை அடையும் முன்னரே இந்தப் பழி உன்னைவிட்டு அகலும் என்று கூறியது.

சிலநாள் கழித்துச் சோழமன்னன்வந்தான். பாண்டியனும் சோழனை எதிர்த்தான். சோழன் புறங்கொடுத்தான். பாண்டியன் இறைவனுடைய அருளை எண்ணி விரட்டினன். சோழநாட்டை அடைந்தான். இடைமருதைச் சேர்ந்ததும் கோபுரத்தைக் கண்டான். தேரினின்று கீழிறங்கிப் பணிந்தான். வீதியை வலமாக வந்தான். பூசத்துறை அதனில் நீர் ஆடினன், காருணியாமிருத தீர்த்தத்திலே முழுகினன். கீழைக்கோபுர வழியே கோயிலுள் புகுந்தான். அரசனைப்பற்றிய பழியும் ஒருபால் நின்றது. அரசன் பெருஞ்சுமை கழிந்தது போன்று எண்ணி மகிழ்ந்தான். இறைவர் மன்னனே! நீ கீழைவாயில் வழியே செல்லாதே பழி அங்கே நிற்கின்றது. ஆகலின் மேலைவாயிலின் வழியே செல் என்றருளினர். மன்னன் மனம் மகிழ்ந்தான். உடன் அம்மையையும் வழிபட்டான்.

வரகுணன் நாள்தோறும் ஆலயத்தை வலம்வந்து காலந்தவருமல் வழிபட்டான். கூடல் நாயகனுக்கு

ஆலயத்தின் வடபால் கோயில் எடுத்தான். மேற்குக் கோபுரம் கட்டினன். தவத்தால் தன் உடல் மெலிந்தான். இறைவர் வரகுணா? கயிலையிலுள்ளபடி கொடுமுடிப் பிரகாரம் ஒன்று இங்கே அமைப்பாய். அந்தப் பிரகாரத்தை நீ ஒருமுறை வலம்வரின் அது ஆயிரம் முறை வலம்வந்ததை ஒக்கும் என்று கூறியருளினர்.

வரகுணன் இறைவர் அருளியபடி சின்னளில் கொடுமுடிப் பிரகாரத்தைச் செய்வித்து முடித்தான். அதனை நாடோறும் வலம் வந்தான். வரகுண பாண்டியர் திருவிடைமருதூரில் தங்கியிருந்த காலத்துப் பற்பல அற்புத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்நிகழ்ச்சிகள் யாவும் கோயிலின் முகப்பில் உள்ள வடபக்கச்சுவரில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுக் காட்சியளிக்கின்றன.

சோழ அரசன் தன்மகளை வரகுணனுக்குச் சிறப்புடன் மணம் செய்து கொடுத்தான். வரகுணன் தன் மனைவியின் அழகினைக்கண்டு வியந்து இவள் மருத நாயகருக்கே உரியவள் என்று உறுதி பூண்டார். உடன் கோயிலை அடைந்து தன் மனைவியை இறைவர் பால் ஒப்புவித்தார். முன்றிலை அடைந்தார். முன் போலவே கதவுகள் சாத்தப்பெற்றன. காவலர்கள் இருவரையும் தேடலானார்கள். பொழுதும் புலர்ந்தது.

பூசைசெய்வதற்கு சிவாசாரியார் உள்ளே புகுந்தார். அரசரும் நுழைந்தார். இறைவரது முடியின் மேல் வளைக்கரம் ஒன்றைக் கண்டனர். இறைவர் அதனையும் மறைத்தருளினர். மன்னர் மகிழ்ந்தார். இக்காட்சி சமயப்பிரசார மண்டபத்திற்கு முன் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

வரகுணர் பாண்டியநாடு அடைந்தார். சிவலோகத்தைக்காண விழைந்தார். இறைவர் அவர் விருப்பப்படி சிவலோகம் காட்டியருளினர். மன்னர் கண்டு மகிழ்ந்து கயிலையை அடைந்து இன்புற்ருர். இதில் இருந்து வரகுணரின் அன்பின் முதிர்வு நன்கு புலப்படுகிறது

பிரதட்சிணச் சிறப்பு

திருவிடைமருதூரில் உள்ள மருதப்பெருமானை வழிபடுவதற்குப் புகுந்து முதல் மதிலின் உட்புறத்தில் வலம் வருதல் அசுவமேதப் பிரதட்சிணம் என்பர். இந்த அசுவமேதப் பிரதட்சிணம் செய்வோர் எல்லா நலங்களும்பெறுவர். தொடங்குங்கால் விநாயகப்பெருமானை வழிபட்டுத் தொடங்கவேண்டும். ஒரு மண்டலம், அரை மண்டலம், கால் மண்டலம் என்று வரையறை செய்துகொண்டு வலம்வருதல் வேண்டும். வலம் வருவதும் இருபத்துநான்கு, பன்னிரண்டு, ஏழு என்ற அளவில் வரல்வேண்டும். தைமாத விழாவில் இங்கு வலம் வருவோர் பெரும்பயன் பெறுவர்.

இதனை அடுத்துள்ளது கொடுமுடிப் பிரகாரம். கயிலாயமலையை வலம்வரும்பேறு இதனுல் சித்திக்கும். இன்னும் வலம் வரும் இடங்கள் பலஉள.

யுவனுசுவன் பெற்றபேறு

அயோத்தி அரசன் யுவனுசுவன். இவனுக்கு நீண்டநாள் மகப்பேறில்லை. வசிட்டரை அடைந்தான். வசிட்டர் மன்னனைத் திருவிடைமருதூர் செல்லுமாறு பணித்தார். அங்குச்சென்று புத்திரகாமேட்டி வேள்வியைச்செய் என்ருர். அரசனும் வழியிடையுள்ள பல தலங்களையும் வழிபட்டு இடைமருதை அடைந்தான். புத்திரகாமேட்டி யாகம்செய்தான். புத்திரப்பேறு கருதி

வைத்துப் பூசித்த பொற்குட நீரைத் தாகமிகுதியால் குடித்தான். அவன் வயிற்றில் கருதங்கியது. பருவம் முதிர்ந்ததும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு புத்திரன் வெளிப்பட்டான். புண் ஆறாது வருத்தியது. முனிவர்கள் கூறியபடி அசுவமேதப் பிரதக்கிணம் வந்தான். புண்ணும் ஆறியது. பின்பு இறைவரை வணங்கித் தன்னாடு அடைந்தான். சின்னாட் சென்று சிவனடி சேர்ந்தான்.

மாந்தாதாச் சிறப்பு

மாந்தாதா யுவனாசுவன் புதல்வன். மாந்தாதாவின் சேனைகள் போரில் புறங்கொடுத்த கலிங்கனைக்கொன்றன. அப்பழி மன்னனைச் சார்ந்தது. பழிநீங்க வழி வேண்டி வசிட்டரைச் சரணடைந்தான். அவர் கூறிய படி திருவிடைமருதூர் அடைந்து அசுவமேதப் பிரதட்சிணம் வந்தான். பழி நீங்கப்பெற்றான். பல நற்பணிகள் செய்தான். இறைவனுக்குத் திருவிழாச்செய்ய எண்ணினான். வசந்தகாலம் வந்தது. பத்துநாட்கள் திருவிழாக் கொண்டாடித் தீர்த்த விழாவும் செய்வித்தான். பின்னர் இறைவர் அருள்பெற்றுத் தன்னுடைய நாட்டை அடைந்து இன்புற வாழ்ந்தான்.

வசுமன்னன் வழிபாடு

காஞ்சி மன்னன் வசுமான். அவன் யாத்திரை கருதிக் காசியாத்திரை சென்று நாடு திரும்பினான். அதற்குள் பகைவர்கள் அவனது நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அரசன் மனம் வருந்திச் சாபாலி முனிவரை அடைந்தான். நாட்டைத் தான் இழந்த காரணத்தை அவரிடம் வினவினான். முனிவர் அவன் செய்த தீங்கைப் பின் வருமாறு கூறினார். அரசனே! நீ முற்பிறப்பில் பெருஞ்செல்வன். வணிகன். பல பண்டங்களும் விற்கும் தொழிலுடையோன்.

உன் வீட்டின்பக்கத்தில் ஒரு அந்தணன் இருந்தான். அந்தணன் உன்னிடம் அரிசி முதலிய பொருளை விலைக்கு வாங்குவான். மாதம் ஒருமுறை அவற்றின் மொத்தத்தொகையை உன்னிடம் செலுத்தி வந்தான். நீ அவன் வாங்கும் பொருள்களின் விலையை மட்டும் எழுதிவைத்து மாதந்தோறும் அவன் கொடுக்கும் தொகையை மட்டும் எழுதாது விடுத்தனை. இவ்வாறு ஐம்பது ஆண்டுகள் ஆயின. அந்தணன் காலம் முடிந்து இறந்தான். அவன் மனைவியும் இறந்தாள். அவர்கட்கு நாலைந்து பிள்ளைகள் உளர். அவர்கள் சிறுவயது உடையவர்கள். அப்பிள்ளைகளை அரசவைக்கு இழுத்துச்சென்று வரவு இல்லாத கணக்கைக் காட்டி அப்பிள்ளைகளுடைய வீடு மற்றப் பொருள்கள் எல்லாவற்றையும் கைக்கொண்டாய். அப்பாவம் இப்போது உன்பால் பலன் தருவதாயிற்று. அக்காலத்துச் சிவபெருமானுக்கும் சிவனடியார்கட்கும் சில பொருள்களைக் கொடுத்தாய். அப்புண்ணியப் பயனால் இப்பிறப்பில் அரசனாக இருந்து உலகை ஆட்சி புரிந்தாய். நீ அசுவமேதயாகம் புரிந்தால் பாவம் ஒழிந்து இழந்தநாட்டை மீட்டும் பெறுவாய் என்றார். பொருள் இல்லையே என்செய்வேன் என்றான். நீ திருவிடைமருதூர் அடைந்து அசுவமேதப் பிரதட்சிணம் வந்தால் இப்பழியும் தீரும் என்றார். அவ்வாறே வந்து பிரதட்சிணம் செய்து இறைவரை வழிபட்டுப் பலம் பெற்றுத் தனது நாட்டை மீட்டும் வென்றான். அவன் இறைவருக்கு மார்கழித் திருவாதிரைத் திருவிழாவைச் சிறப்புற நடாத்திவைத்தான்.

அஞ்சத்துவசன் அன்பு

இம்மன்னன் சோழநாட்டை உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டவன். இவன் நண்பன்

மித்திரன். மித்திரன் காசி யாத்திரை செல்ல விரும்பித் தன் மனைவியை அரசன் காவலில் விட்டுச் சென்றான் சில காலங்கழித்துக் கங்கையாடிய மித்திரன் தன் ஊர் திரும்பினான். இரவாகி விட்டதால் மன்னனைக் காணாது மனையாளோடு தங்கிவிட்டான். மாறுவேடத்துடன் சென்ற மன்னன் மித்திரன் வீட்டில் ஆண் குரல் கேட்டான். மித்திரன் குரலைத் தவறாக எண்ணி உள்ளே ஏறிக்குதித்துக் கவனியாமல் அவனை வாளால் வெட்டி வீழ்த்தினான். உண்மை உணர்ந்து வருந்தினான். பின்னர் பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரையடைந்து தன்னைப்பற்றிய பழி நீங்கப் பெற்றுச் சிறப்படைந்தான்.

நாரதர் சிறப்புணர்ந்தது

திருவிடைமருதூரை தேவவிரதன் என்ற கள்வன் அடைந்து தைப்பூசநாளில் வழிபட்டான். பெருமான் உமையோடு வலம் வருவதைக்கண்டான். இறைவன் திருமேனியில் உள்ள திருவாபரணங்களைக் களவாட எண்ணி ஒரு உபாயஞ்செய்தான். அரசனை அணுகிக் கோயில் நிருவாக அதிகாரத்தைப்பெற்றான். வீதியில் ஒரு இருப்பிடம் அமைத்தான். ஆபரணங்கள் வைக்குமிடங்கள் நன்கு தெரிந்தும் களவாட அவனுக்குச் சமயம் கிட்டவில்லை.

இந்நிலையில் அவனுக்கு வலப்பக்கத்தில் பிளவை உண்டாயிற்று. அது காரணமாக அவன் இறந்தான். முடிவில் புழுவாகப் பிறந்தான், புண்ணியர் ஒருவரால் அடிபட்டு இறக்க அவன் விண்ணுலகம் அடைந்தான்.

நந்தகன் அருள் பெறல்

நந்தகன் என்பவன் அந்தணன். அவன் எதிர்ப்படும் பெண்களை வாள்கொண்டு வெட்டி அவர்களது

அணிகலன்களைக் கவர்ந்துகொள்வான். அப்பொருள்களைக்கொடுத்து ஒருவர்பின் ஒருவராக ஐந்து பெண்களை மணந்தான். அவர்களும் ஒருவர்பின் ஒருவராக இறந்தனர். இதனைக்கண்டு அவன் மனம் வெறுத்துத் திரியலானான். ஒருநாள் ஒரு பெண்ணை எதிர்ப்பட்டான். அவளை நெருங்கினான். அவள் நாணி ஒதுங்கினாள். அவள் மறுத்தும், இவன் அவளை மணந்தான். ஒரு குழந்தை பிறந்தது. அவள் இறந்தாள். குழந்தையைக்கொன்றான். அந்நிலையில் பைத்தியம் பிடித்தது. பல நாடுகள் கடந்து முடிவில் இடைமருதூரை அடைந்தான். காவிரியில் ஆடினான். இறைவரை வழிபட்டான். பாவம் நீங்கப்பெற்றான்.

பூசத் திருவிழாச் சிறப்பு

காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு சோழநாட்டினை விரசோழன் ஆண்டுவந்தான் என்று முன்னரே கூறப்பட்டது. விரசோழனே இவ்வாலயத்தினையும் அமைத்தான் என்று முன்னர் கூறப்பட்டுள்ளது. அவ்வரசனே உரோமசமுனிவரை வணங்கி ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்கப் பெருமானுக்குத் திருவிழா நடத்துவதற்குரிய நன்னாளைக் குறிப்பிட்டு அருளுமாறு வேண்டிக்கொண்டான். அம்முனிபுங்கவரும், எல்லா நலங்களும் ஒருங்கே நிறைந்த தைத் திங்கள் பூச நாளைக் குறிப்பிட்டார். அவர் கூற்றுப்படி வீர சோழனால் தொடங்கப்பட்டதே தைப் பூசத் திருவிழாவாகும்.

இத்தலத்துக் கல்வெட்டுக்களைக் கொண்டு நோக்கினாலும், ஒவ்வொரு மாதத்திலும் பெருந்திருவிழா நடப்பதற்கு, நிலங்கள் முதலியன இறையிலியாகப் பண்டைய மன்னர்கள் கொடுத்துள்ளதாகத் தெரிகின்றது. அவ்வாறு மன்னர்களால் ஏற்படுத்திய விழாக்களில் "தைப்பூச விழாவே" மிக்க சிறப்பினை

யுடையது. பூச விழாவில் தேவர் முதலியோர்கள் வந்து கலந்து கொள்வார்கள் என்று புராண வரலாற்ருல் அறியக்கிடக்கின்றது.

பூசத்தன்று ஏகநாயகர் காவிரியில் உள்ள கல்யாண தீர்த்தத்துக்கு எழுந்தருளித் தீர்த்தங் கொடுத்தருளுமாறு பத்துநாட்கட்கு முன்னரே கொடியேற்றி விழாத் தொடங்கப் பெறும். விழாவின் பத்துநாட்களும் வீதிகள் எல்லாம் நன்கு அலங்கரிக்கப்பெற்று எங்கும் மணவலங்காரங்களாகவே காணப்படும். ஏகநாயகர் வீதியில் வருங்கால், அவ்வூர் எழிலுறு ஆண் பெண் இருபாலரும், அவரது திருவுருவத்திலேயே ஈடுபட்டு இன்புறுவார்கள். அம்மக்களது மனம் அவனது அழகில் ஈடுபடுவதைத்தவிர வேறென்றனையும் அறியாது. திருவிழாவில் எல்லா மக்களும் ஒன்ருகவே கூடியிருந்து இன்பத்தை அனுபவிப்பார்கள். அரசனுயினும், அன்பராயினும் ஆண்டவன் முன்பு ஒரு படித்தானவராகவே இருப்பார்கள்.

மேலே கூறிய சிறப்புக்கள் அமைந்த இப்பெருவிழாவிற்குப் போக எண்ணும் அன்பர்கள் சில விதி முறைகளைப் பின்பற்ற வேண்டும். முன்னர் அடியார் முதலாயினுர்க்கு அன்னதானமும், யாத்ராதானம் முதலானதும் செய்து மனைவி மக்களுடன் தூய மனம் உடையவராய், ஸ்ரீ மகாலிங்கப் பெருமானையே மனத்திடையிருத்தி மகிழ்வுடன் செல்லவேண்டும். தலத்தையடைந்ததும், தலத்திலுள்ள தீர்த்தங்களில் மூழ்கி அவரவர்கள் தத்தமக்கு இயன்ற அளவு தானங்கள் செய்து ஆலயத்துட் சென்று இறைவனை வழிபடவேண்டும்.

மேலே கூறியவாறு பத்து நாட்களும் முறைப்படித் தீர்த்தமாடி வீதிகளை மௌன நிலையில் வலம் வர

வேண்டும். பின் இயன்ற அளவு தானங்கள் செய்ய வேண்டும். அதனை அடுத்து ஆன்றோரைக்கொண்டு அத்தல புராணத்தைச் சொல்லச்செய்து கேட்டல் வேண்டும். இவ்வாறு பத்துத் தினங்களும் முறைப் படி உணவின்றி விரதமிருந்து பதினோராவது நாள் காவிரி முதலாய புண்ணிய தீர்த்தங்களில் நீராடி விரதத்தினை முடிப்பது நல்லது. அவ்வாறு விரதம் இருக்க இயலாதார், பால் பழம் முதலிய உண்டு விரதம் இருக்கலாம். புத்திரப்பேற்றை விரும்பினோர் தீய செயல்களை யெல்லாம் நீக்கி விரதம் இருக்க வேண்டும். சாதாரணமாக வந்து விழாவினைத் தரிசித் தவர்களும் எல்லா நலன்களையும் பெற்று இறுதியில் இறைத் திருவடியையும் எய்துவார்கள்.

இவ்விழாவின் சிறப்பினைப் பிரமதேவரால் அறிந்த நாரத மாமுனிவர், தம்முடன் முனிவர் கூட்டங்கள் தொடரத் திருவிடைமருதூரை அடைந்து பூச நீராடிப் புனிதரானார் என்பது புராண வரலாறாகும்.

இன்றும் இப்பூசப் பெருவிழாவில் மெய்யன்பர்கள் பலர் திரளாக வந்து தீர்த்தமாடி, எண்ணரிய பல நலன்களைப் பெற்றுவருகிறார்கள். இது உலகமக்கள் அனைவரும் வந்து கண்டு களிக்கவேண்டிய ஒரு பெருந் திருநாள் என்று சொல்வதில் ஐயமேதுமின்று. எல்லா அன்பர்களும் இன்புறு முறையில் இன்றும் இத்திருவிழா பண்டுபோல் நடந்துகொண்டு வருகின் றது என்பது உலகறிந்ததே.

உணங்கல்மீன் உயிர்பெற்றது

திருச்சத்தி முற்றத்திலிருந்து பரதவன் ஒருவன் கடற்கரைக்குச்சென்றான். அங்கு உணங்கிய மீன்களை வாங்கிப் பொதிமாட்டின்மேல் ஏற்றிவந்தான். இரவு

நேரத்தில் திருவிடைமருதூரை அடைந்தவன் உருத்திர தீர்த்தக்கரையில் தங்கினன். உடன் வந்தோர் இவனைவிட்டு இரவே சென்றுவிட்டார்கள். பொழுது புலர்ந்ததும் துணைவரைக்காணது மிக வருந்தினன். இறைவர் பொதியைக்காண அவிழ்க்கச் செய்தார். உணங்கியமீன்கள் எல்லாம் உயிர்பெற்றுக் குளத்தில் குதித்தன. அம்மீன்கள் உடன் உருத்திரர் வடிவங் கொண்டு தேவலோகம்சென்றன. அதுமுதல் அது உருத்திர தீர்த்தம் என்றும் அதன் கரையிலிருந்த பெருமான் ஆத்மநாதர் என்றும் பெயர்பெற்றார். இந்தத் தீர்த்தமும் கோயிலும் தெற்கு வீதியின் வடபால் உள்ளன.

பொன்னுருவச்சோழன்

பரதகுலச் சிறுவன் பெருமானே! நல்ல சுமை இல்லாவிடில் இம்மாடு துள்ளிக்கொண்டு அடங்காமற் செல்லுமே என்செய்வேன் என்றான். மருதவாணர் சிறுவனை நோக்கி, கீழேகிடக்கின்ற செங்கற்களைப் பொறுக்கிக் கட்டிக்கொள் என்றார். சிறுவனும் அவ்வாறே கட்டிக்கொண்டு ஊர் சென்றான். திருவிடைமருதூரில் நடந்தவற்றைத் தாயிடங்கூறினான். தாயும் சேயும் அரசனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினார்கள். பொதியை அவிழ்த்து நோக்க எல்லாம் பொற்கட்டிகளாக விளங்கின. பொருள் உங்களுடையதே எடுத்துச் செல்லுங்கள் என்று கூறிவிட்டு அரசன் இடைமருதூரை அடைந்தான். புதல்வன் வேண்டி இறைவரை வழிபட்டான். தன்னால் செய்து வளர்க்கும் பொன்மகவை இறைவர்எதிர்வைத்தான். இறைவர் அருளால் அது உயிர்பெற்றது. அந்தக் குழந்தைக்குத் திருவடி தீட்சைசெய்தார். பின்னர் அரசன் கோயிலில் பற்பல திருப்பணிகள் செய்தான். முடிவில் நற்பேறு பெற்றான்.

சுணங்கன் கதிபெற்றது

சிவத்துரோகியான ஒருவன் பலவகையான இழி பிறவிகளை எடுத்து முடிவிலே நாய்ப்பிறவியை எடுத்தான். அந்த நாயானது பல இடங்களிலே அலைந்து திரிந்து திருவிடைமருதூரை அடைந்தது. தளர்வுற்று சிவயோகி உறையும்மடத்தில் களைப்புமிகுதியால் படுத்திருந்தது. அது சிவயோகியின் எச்சிலை உண்டது. அப்புண்ணிய வசத்தால் காசி மன்னன் மகளாகப் பிறந்தது. அப்பெண்ணைச் சோழமன்னன் மணந்தான். சோழன் மனைவி சிலநாள் கழித்துத் திருவிடைமருதூர் இறைவரை வழிபட்டுவர எண்ணங்கொண்டாள். சிவயோகியின் மடத்தை அடைந்தாள். அவர் உண்மை உணர்ந்து இறைவர்பால் குறை இரந்தார். இறைவரும் தனது பேரொளியில் அச்சிவயோகியையும் பெண்ணையும் சேர்த்துக்கொண்டார். அடியார் மிச்சிலின் சிறப்பு இதனல் விளங்கும்.

திரியம்பகன் திருவருட்பேறு

திரியம்பகன் சோழநாட்டில் அந்தணர் குலத்தில் தோன்றியவன். எல்லாக் கலைகளும் கற்ற பின்னர் குருவருளைப்பெற விழைந்தான். அருளும் பெற்முன். ஆயினும் வினைவசத்தால் உபதேசமொழியை உணர முடியாமல் மறந்தான். கழைக்கூத்தி அவ்வுபதேச மொழியைத் தான் எழுதிக்கொண்டு அழித்துவிட்டாள். அஃதுணர்ந்து அக்கூத்தியிடம் திரியம்பகன் அறிந்துகொள்ளச் சென்று, பல துன்பங்களுக்கு இலக்கானுன். முடிவில் அவள் மனமிரங்கி அவ்வுபதேச மொழியைக் கூறினுள். அவளிடம் விடைபெற்று, பல தலங்களையும் வழிபட்டுத் திருவிடைமருதூரை அடைந்து மருதீசரை வழிபட்டான். திரியம்பகன் அவர் அருள்பெற்றுச் சிறப்படைத்தான்.

திருக்கல்யாண வரலாறு

அகத்திய முனிவர். தமிழ் பரப்பத் தென்னாடு அடைந்தகாலத்து, இத்தலத்தையடைந்தார். காசிபர் முதலாய முனிவர்கட்குச் சிவதத்துவத்தை உபதேசித்தார். அம் முனிவர்களோடு தாமும் அம்பிகையைக் குறித்துத் தவஞ்செய்து அருள் பெற்றார். பின் அகத்தியர் அம்பிகையோடும், முனிவர்களோடும் சிவபெருமானைக் குறித்துச் தவஞ்செய்யலானார். பெருமான் ஏகநாயகமூர்த்தியாய் அவர்கட்குக் காட்சிகொடுத்தார். காட்சி கொடுத்த பெருமான் முனிபுங்கவர்கட்கு வேண்டும் வரங்களைத் தந்தருளினார். முனிவர்களும் வரங்களைப் பெற்று உய்ந்தார்கள்.

அகத்திய முனிவர், இறைவரிடம், முன்பு எவ்வாறு பர்வத ராஜனுடைய வேண்டுகோட் கிணங்கி, உமையை மணந்து அருள்செய்தீரோ, அவ்வாறே இத்தலத்திலும் உமது ஆணைப்படி பிரிந்து தவஞ் செய்துகொண்டிருக்கும் உமாதேவியை மணந்து, எளியோங்கட்குக் காட்சிதந்து அருள்செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இறைவன் அவர் வேண்டுகோட்கிணங்கி வைகாசித் திங்களில் உத்திர நட்சத்திரத்தில் இறைவியைத் திருமணஞ் செய்து அகத்திய முனிவருக்கும், ஏனைய முனிவர்கட்கும் காட்சி கொடுத்தருளினார்.

பின்னர் இவ்வரலாற்றுக் குறிப்பினை யுணர்ந்த, சூரியகுல அரசனாகிய மாந்தாதா என்பவன், பெரியோர்களைக் கொண்டு திருவிழாவினைத்தொடங்கினான். ஆறுந்திருநாள் உத்திர நட்சத்திரத்தில் திருக்கல்யாணத்தை முறைப்படி நடத்திப் பெரும்பேறு பெற்றான்.

இந்தத் திருக்கல்யாணத் திருவிழா, வேதாகம முறைப்படிச் சிறப்பான முறையில், இன்றும் இவ்வாலய பரம்பரைத் தர்மகர்த்தரவர்களும், திருக்கயிலாய பரம் பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து அதிபருமாகிய 22-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் முனனிலும் மிக்க மேம்பாட்டோடு நடத்தப்பட்டு வருகின்றது என்பது உலகறிந்த ஒன்று.

முற்றும்

திருவிடைமருதூர்த் தேவாரம்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண்—தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

ஓடேகலன் உண்பதும் ஊரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானு மகிழ்ந்(து)
ஈடாவுறை கின்ற இடைமரு தீதோ. 1

தடங்கொண் டதோர் தாமரைப் பொன்முடி தன்மேற்
குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்றன் இடைமரு தீதோ. 2

வெண்கோவணங் கொண்டொரு வெண்டலை யேந்தி
அங்கோல்வளை யாளையொர் பாக மமர்ந்து
பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்
எங்கோனுறை கின்ற இடைமரு தீதோ. 3

அந்தம்மறி யாத வருங்கல மூந்திக்
கந்தங்கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தையுறை கின்ற இடைமரு தீதோ. 4

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசன்உறை கின்ற இடைமரு தீதோ. 5

வன்புற்றிள நாக மசைத்தழ காக
என்பிற்பல மாலையும் பூண்டெரு தேறி
அன்பிற்பிரி யாதவ ளோடு முடனாய்
இன்புற்றிருந் தான்றன் இடைமரு தீதோ. 6

தேக்குந் திமிலும் பலவுஞ் சுமந்துந்திப்
போக்கிப்புறம் பூசல டிப்ப வருமால்
ஆர்க்குந்திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்கவிருந் தான்றன் இடைமரு தீதோ. 7

பூவார்குழ லாரகில் கொண்டு புகைப்ப
ஓவாதடி யாரடி யுள்குளிர்ந் தேத்த
ஆவாவரக் கன்றனை ஆற்றல் அழித்த
ஏவார்சிலை யான்றன் இடைமரு தீதோ. 8

முற்றாததொர் பான்மதி சூடு முதல்வன்
நற்றாமரை யானெடு மால்நயந் தேத்தப்
பொற்றோளியுந் தானும் பொலிந்தழ காக
எற்றேயுறை கின்ற இடைமரு தீதோ. 9

சிறுதேரருஞ் சில்சம ணும்புறங் கூற
நெறியேபல பத்தர்கள் கைதொழு தேத்த
வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார்மழு வாளன் இடைமரு தீதோ. 10

கண்ணார்கமழ் காழியுள் ஞானசம் பந்தன்
எண்ணார்புக ழெந்தை இடைமரு தின்மேல்
பண்ணோடிசை பாடிய பத்தும்வல் லார்கள்
விண்ணோருல கத்தினில் விற்றிருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவிருக்குக்குறள்

பண்—குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தோடோர் காதினன், பாடு மறையினன்
காடு பேணிநின், றாடு மருதனே 1

கருதார் புரமெய்வர், எருதே யினிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. 2

எண்ணு மடியார்கள், அண்ணல் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. 3

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியா ருலகிலே. 4

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், புந்தி நல்லோரே. 5

கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. 6

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையா ரின்பமே. 7

எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. 8

இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. 9

நின்றுண் சமண்தேரர். என்று மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. 10

கருது சம்பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. 11

திருச்சிற்றம்பலம்

பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டானிழற்கீழ்
இருந்தவன் வளநகர் இடைமருதே. 1

தோற்றவன் கேடவன் துணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவ னிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றவன் வளநகர் இடைமருதே. 2

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவி லேற்றினன் ஞாலமெல்லாம்
முடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை எம்மிறையே. 3

பணைமுலை உமையொரு பங்கனென்றார்
துணைமதின் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநகர் இடைமருதே. 4

பொழிலவன் புயலவன் புயலியக்குந்
தொழிலவன் துயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநகர் இடைமருதே. 5

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகடல் நஞ்சையுண்ட
இறையவன் வளநகர் இடைமருதே. 6

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கண் முறைவணங்க
இனிதுறை வளநகர் இடைமருதே. 7

தருக்கின வரக்கன தாளுந்தோளும்
நெரித்தவ னெடுங்கைமா மதகரியன்(று)
உரித்தவன் ஒன்னலர் புரங்கண்மூன்றும்
எரித்தவன் வளநகர் இடைமருதே. 8

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியர வணைமறி கடற்றுயின்ற
கரியவன் அலரவன் காண்பரிய
எரியவன் வளநகர் இடைமருதே. 9

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியி லுரையவை பொருள்கொளாதே
அந்தண ரோத்தினொ டரவமோவா
எந்தைதன் வளநகர் இடைமருதே. 10

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ(டு) ஓங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவிராகம்

பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுரம் எரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம் இடர்கெட லெளிதே. 1

மழைநுழை மதியமொ டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி யழகொடு மிளிர்வதோர்
இழைநுழை புரியணல் இடம்இடை மருதே. 2

அருமையன் எளிமையன் அழல்விட மிடறினன்
கருமையின் ஒளிபெறு கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொ டொருமை
இருமையும் உடையணல் இடம்இடை மருதே. [யன்

பொரிபடு முதுகுற முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையுள் நடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி யொளிபெற மிளிர்வதோர்
எரிவளர் சடையனல் இடம்இடை மருதே. 4

வருநல மயிலன மடைநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கும் இடம்இடை மருதே. 5

கலையுடை விரிதுகில் கமழ்குழ லகில்புகை
மலையுடை மடமகள் தனையிடம் உடையோன்
விலையுடை யணிகல னிலனென மழுவினோ(டு)
இலையுடை படையவன் இடம்இடை மருதே. 6

வளமென வளர்வன வரிமுரல் பறவைகள்
இளமணல் அணைகரை இசைசெயும் இடைமரு(து)
உளமென நினைபவர் ஒலிகழல் இணையடி
குளமண லுறமூழ்கி வழிபடல் குணமே. 7

மறையவன் உலகவன் மதியவன் மதிபுல்கு
துறையவ னெனவல வடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கமழ்சடை
இறையவன் உறைதரும் இடம்இடை மருதே. 8

மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை அகலமொ டிகலின ரினதெனக்
கருதிடல் அரியதோர் உருவொடு பெரியதோர்
எருதுடை அடிகள்தம் இடம்இடை மருதே. 9

துவருறு விரிதுகில் உடையரும் அமணரும்
அவருறு சிறுசொலை நயவன்மி னிடுமணல்
கவருறு புனலிடை மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெடல் அணுகுதல் குணமே. 10

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழிலிடை மருதினை இசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவிராகம்

பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலியுரி விரவிய அரையினர்
திரிதரும் எயிலவை புனைகணை யினிலெய்த
வெரிதரு சடையினர் இடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 1

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரும் இடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவிலர் உலகினிற்
பிறிதிரை பெறுமுடல் பெறுகுவ தரிதே. 2

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென இடுபலி யவரிடை மருதினை
வலமிட வுடனலி விலதுள வினையே. 3

விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவர் இடைமரு தெனுநகர்
உடையவர் அடியிணை தொழுவதெம் உயர்வே. 4

உரையரு முருவின ருணர்வரு வகையினர்
அரைபொரு புலியத ளுடையின ரதன்மிசை
இரைமரு மரவினர் இடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. 5

ஒழுகிய புனல்மதி யரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை யடிகள தறைகழல்
எழிலின ருறைஇடை மருதிணை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருறல் இலரே. 6

கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடு
நிலையினர் சலமக ளுலவிய சடையினர்
மலைமகள் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவர் இடம்இடை மருதே. 7

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரனிறி யவரிடை மருதது
பரவுவ ருருவிணை பொருவுதல் பெரிதே. 8

அரியொடு மலரவ னெனவிவ ரடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழ
எரிதரு முருவர்தம் இடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 9

குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலை
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமனம் நினைவதும் எழிலே. 10

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. 11

திருச்சிற்றம்பலம்

பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பொங்குநூன் மார்பினீர் பூதப் படையினீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாம வேதமோதினீர்
எங்குமெழிலார் மறையோர்கள் முறையா லேத்த இடைமருதில்
மங்குல்தோய் கோயிலே கோயி லாக மகிழ்ந்தீரே. 1

நீரார்ந்த செஞ்சடையீர் நெற்றித் திருக்க ணிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழுவொன் றுடையீர் பூதம் பாடலீர்
ஏரார்ந்த மேகலையாள் பாகங்கொண்டீர் இடைமருதிற்
சீரார்ந்த கோயிலே கோயி லாகச் சேர்ந்தீரே. 2

அழன்மல்கு மங்கையி லேந்திப் பூத மவைபாடச்
சுழன்மல்கு மாடலீர் சுடுகா டல்லாற் கருதாதீர்
எழின்மல்கு நான்மறையோர் முறையால் ஏத்த இடைமருதிற்
பொழின்மல்கு கோயிலே கோயி லாகப் பொலிந்தீரே. 3

பொல்லாப் படுதலையொன் றேந்திப் புறங்காட் டாடலீர்
வில்லாற் புரமூன் றுமெரித்தீர் விடையார் கொடியினீர்
எல்லாக் கணங்களு முறையா லேத்த இடைமருதிற்
செல்வாய கோயிலே கோயி லாகச் சேர்ந்தீரே. 4

வருந்திய மாதவத்தோர் வானோ ரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூச மாடி யுலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீரா லேத்த இடைமருதிற்
பொருந்திய கோயிலே கோயி லாகப் புக்கீரே. 5

சலமல்கு செஞ்சடையீர் சாந்த நீறு பூசினீர்
வலமல்கு வெண்மழுவொன் றேந்தி மயானத் தாடலீர்
இலமல்கு நான்மறையோ ரினிதா யேத்த இடைமருதிற்
புலமல்கு கோயிலே கோயி லாகப் பொலிந்தீரே. 6

புனமல்கு கொன்றையீர் புலியின் அதளீர் பொலிவார்ந்த
சினமல்கு மால்விடையீர் செய்யீர் கரிய கண்டத்தீர்
இனமல்கு நான்மறையோ ரேத்துஞ் சீர்கொள் இடைமருதிற்
கனமல்கு கோயிலே கோயி லாகக் கலந்தீரே. 7

சிலையுய்த்த வெங்கணையாற் புரமூன் றெரித்தீர் திறலரக்கன்
தலைபத்துந் திண்டோளு நெரித்தீர் தையல் பாகத்தீர்
இலைமொய்த்த தண்பொழிலும் வயலுஞ் சூழ்ந்த இடைமருதில்
நலமொய்த்த கோயிலே கோயி லாக நயந்தீரே. 8

மறைமல்கு நான்முகனு மாலு மறியா வண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர் கபால மேந்து கையினீர்
அறைமல்கு வண்டினங்க ளாலுஞ் சோலை இடைமருதில்
நிறைமல்கு கோயிலே கோயி லாகத் திகழ்ந்தீரே. 9

சின்போர்வைச் சாக்கியரு மாசு சேருஞ் சமணரும்
துன்பாய கட்டுரைகள் சொல்லி அல்லல் தூற்றவே
இன்பாய அந்தணர்களேத்தும் ஏர்கொள் இடைமருதில்
அன்பாய கோயிலே கோயி லாக வமர்ந்தீரே. 10

கல்லின் மணிமாடக் கழும லத்தார் காவலவன்
நல்ல வருமறையான் நற்றமிழ் ஞான சம்பந்தன்
எல்லி இடைமருதில் ஏத்து பாடல் இவைபத்தும்
சொல்லு வார்க்குங் கேட்பார்க்குந் துயர மில்லையே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசன் எம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. 1

மறையின் நாண்மலர் கொண்டடி வானவர்
முறையி னால்முனி கள்வழி பாடுசெய்
இறைவ னெம்பெரு மானிடை மருதினில்
உறையு மீசனை உள்குமென் உள்ளமே. 2

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்று மெந்தை பிரானிடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே. 3

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. 4

வண்ட ணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனார்
எண்டி சைக்கும் இடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே. 5

ஏற தேறும் இடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த வழகனார்க்(கு)
ஊறி ஊறி உருகுமென் உள்ளமே. 6

விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரும் மதிக்கப் படுபவர்
எண்ணி னார்பொழில் சூழிடை மருதினை
நண்ணி னாரைநண் ணாவினை நாசமே. 7

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தனார்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனார்
எந்தை யென்னிடை மருதினில் ஈசனைச்
சிந்தை யானினை வார்வினை தேயுமே. 8

வேத மோதும் விரிசடை அண்ணலார்
பூதம் பாடநின் றாடும் புனிதனார்
ஏதந் தீர்க்கும் இடைமரு தாவென்று
பாத மேத்தப் பறையும்நம் பாவமே. 9

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே. 10

முற்றி லாமதி சூடும் முதல்வனார்
ஒற்றி னார்மலை யாலரக் கன்முடி
எற்றி னார்கொடி யாரிடை மருதினைப்
பற்றி னாரைப்பற் றாவினை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் வைகும் அயலெலாம்
இறைவன் எங்கள் பிரானிடை மருதினில்
உறையும் ஈசனை உள்குமென் உள்ளமே. 1

மனத்துண் மாயனை மாசறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளைவெள் ளைமதி சூடியை
எனக்குத் தாயையெம் மானிடை மருதினை
நினைத்திட் டூறி நிறைந்ததெ னுள்ளமே. 2

வண்ட ணைந்தன வன்னியு மத்தமும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனை
எண்டிசைக்கும் இடைமரு தாவென
விண்டு போயறும் மேலை வினைகளே. 3

துணையி லாமையில் தூங்கிருட் பேய்களோ(டு)
அணைய லாவ தெமக்கரி தேயெனு
இணையி லாஇடை மாமரு தில்லெழு
பணையி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே. 4

மண்ணை யுண்டமால் காணுன் மலரடி
விண்ணை விண்டயன் காணுன் வியன்முடி
மொண்ணை மாமரு தாவென்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே. 5

மங்கை காணக்கொ டார்மண மாலையைக்
கங்கை காணக்கொ டார்முடிக் கண்ணியை
நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே. (6, 7, 8, 9, 10)

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

காடுடைச் சுடலை நீற்றர் கையில்வெண் தலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப் பரமனுர் மருத வைப்பில்
தோடுடைக் கைதையோடு சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி இடைமரு திடங்கொண் டாரே.

முந்தையார் முந்தி யுள்ளார் மூவர்க்கு முதல்வரானுர்
சந்தியார் சந்தியுள்ளார் தவநெறி தரித்து நின்றுர்
சிந்தையார் சிந்தை யுள்ளார் சிவநெறி யனைத்துமானுர்
எந்தையாரெம்பிரானுர் இடைமரு திடங்கொண்டாரே.

காருடைக் கொன்றை மாலைக் கதிர்மதி யரவி னோடு
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதியாய
போருடை விடையொன் றேற வல்லவர் பொன்னித் தென்பால்
ஏருடைக் கமலமோங்கும் இடைமரு திடங்கொண் டாரே. 3

விண்ணினார் விண்ணின் மிக்கார் வேதங்க ளான்குமங்கம்
பண்ணினார் பண்ணின் மிக்க பாடலார் பாவந்தீர்க்கும்
கண்ணினார் கண்ணின் மிக்க நுதலினார் காமற்காய்ந்த
எண்ணினா ரெண்ணின்மிக்க இடைமரு திடங்கொண் டாரே. 4

வேதங்க ளான்குங் கொண்டு விண்ணவர் பரவி யேத்தப்
பூதங்கள் பாடி யாட லுடையவன் புநித னெந்தை
பாதங்கள் பரவி நின்ற பத்தர்கள் தங்கண் மேலை
ஏதங்க டீர நின்றார் இடைமரு திடங்கொண் டாரே. 3

பொறியர வரையி லார்த்துப் பூதங்கள் பலவுஞ் சூழ
முறிதரு வன்னி கொன்றை முகிர்சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க வைத்தவ ரெத்தி சையும்
எறிதரு புனல்கொள் வேலி இடைமரு திடங்கொண் டாரே. 6

படரொளி சடையி னுள்ளாற் பாய்புன லரவினோடு
சுடரொளி மதியம் வைத்துத் தூவொளி தோன்றுமெந்தை
அடரொளி விடையொன் றேற வல்லவ ரன்பர்தங்கள்
இடரவை கெடவு நின்றார் இடைமரு திடங்கொண்டாரே. 7

கமழ்தரு சடையி னுள்ளாற் கடும்புன லரவி னோடு
தவழ்தரு மதியம் வைத்துத் தன்னடி பலரு மேத்த
மழுவது வலங்கை யேந்தி மாதொரு பாக மாகி
எழில்தரு பொழில்கள் சூழ்ந்த இடைமரு திடங்கொண்டாரே. 8

பொன்றிகழ் கொன்றை மாலை புதுப்புனல் வன்னிமத்தம்
மின்றிகழ் சடையில் வைத்து மேதகத் தோன்று கின்ற
அன்றவ ரளக்க லாகா அனலெரி யாகி நீண்டார்
இன்றுட னுலக மேத்த இடைமரு திடங்கொண் டாரே 9

மலையுடன் விரவி நின்று மதியிலா அரக்க னாக்கத்
தலையுட னடர்த்து மீண்டே தலைவனாய் அருள்கள் நல்கிச்
சிலையுடை மலையை வாங்கித் திரிபுர மூன்று மெய்தார்
இலையுடைக் கமலவேலி இடைமரு திடங்கொண் டாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

சூலப் படையுடையார் தாமே போலுஞ்
சுடர்த்திங்கட் கண்ணி உடையார் போலும்
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலும்
மந்திரமும் தந்திர மு மானார் போலும்
வேலைக் கடனஞ்ச முண்டார் போலும்
மேல்வினைகள் தீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 1

காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலுங்
காரானை யீருரிவை போர்த்தார் போலும்
பாரார் பரவப் படுவார் போலும்
பத்துப்பல் லூழி பரந்தார் போலும்
சீரார் வணங்கப் படுவார் போலுந்
திசையனைத்து மாய்ம்மற்று மானார் போலும்
ஏரார் கமழ்குழலாள் பாகர் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 2

வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
　　விண்ணுலகு மண்ணுலகும் ஆனார் போலும்
பூதங்க ளாய புராணர் போலும்
　　புகழ வளரொளியாய் நின்றார் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்
　　பத்தர்களுக் கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலும்
　　இடைமருது மேவிய ஈச னாரே. 3

திண்குணத்தார் தேவர்க ணங்க ளேத்தித்
　　திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
　　வியன்கொண்டல் மேற்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
　　பரங்குன்ற மேய பரமர் போலும்
எண்குணத்தார் எண்ஃணு யிரவர் போலும்
　　இடைமருது மேவிய ஈச னாரே. 4

ஊக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
　　உயர்பொழி லண்ணாவி லுறைகின் றாரும்
பாகம் பணிமொழியாள் பங்க ராகிப்
　　படுவெண் தலையிற் பலிகொள் வாரும்
மாகமுடை மும்மதிலு மெய்தார் தாமும்
　　மணிபொழில்சூழ் ஆரூர் உறைகின் றாரும்
ஏகம்ப மேயாரு மெல்லா மாவார்
　　இடைமருது மேவிய ஈச னாரே. 5

ஐயிரண்டு மாருென்று மானார் போலும்
    அறுமூன்று நான்மூன்று மானார் போலும்
செய்வினைகள் நல்வினைகள் ஆனார் போலுந்
    திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கொய்மலராங் கொன்றைச் சடையார் போலுங்
    கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலும்
    இடைமருது மேவிய ஈசனாரே. 6

பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
    பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்ருய்
விரியாத குணமொருகால் நான்கே என்பர்
    விரிவிலாக் குணநாட்டத் தாறே என்பர்
தெரிவரிய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
    பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும்
எரியாய தாமரைமேல் இயங்கி னாரும்
    இடைமருது மேவிய ஈசனாரே. 7

தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
    சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆல மமுதாக வுண்டார் போலும்
    அடியார்கட் காரமுத மானார் போலும்
காலனையுங் காய்ந்த கழலார் போலுங்
    கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலும்
    இடைமருது மேவிய ஈசனாரே. 8

பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்
படைக்கணாள் பாக முடையார் போலும்
அந்திவாய் வண்ணத் தழகர் போலும்
அணிநீல கண்ட முடையார் போலும்
வந்த வரவுஞ் செலவு மாகி
மாறாதென் னுள்ளத் திருந்தார் போலும்
எந்த மிடர்தீர்க்க வல்லார் போலும்
இடைமருது மேவிய ஈச னாரே. 9

கொன்றையங் கூவிள மாலை தன்னைக்
குளிர்சடைமேல் வைத்துகந்த கொள்கை யாரும்
நின்ற வநங்கனை நீறா நோக்கி
நெருப்புருவாய் நின்ற நிமல னாரும்
அன்ற வரக்க னலறி வீழ
அருவரையைக் காலா லழுத்தி னாரும்
என்று மிடுபிச்சை யேற்றுண் பாரும்
இடைமருது மேவிய ஈச னாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஆறு சடைக்கணிவர் அங்கைத் தீயர்
அழகர் படையுடையர் அம்பொற் றோண்மேல்
நீறு தடவந் திடப மேறி
நித்தம் பலிகொள்வர் மொய்த்த பூதம்
கூறுங் குணமுடையர் கோவ ணத்தர்
கோடால வேடத்தர் கொள்கை சொல்லின்
ஈறு நடுவு முதலு மாவார்
இடைமருது மேவி இடங்கொண் டாரே. 1

மங்குன் மதிவைப்பர் வான நாடர்
 மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிகவைப்பர் பால்போ னீற்றர்
 பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
 சரிதை பலவுடையார் தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவர் என்னுள் நீங்கார்
 இடைமருது மேவி இடங்கொண் டாரே. 2

ஆல நிழல்விருப்ப ராகா யத்தர்
 அருவரையி னுச்சியார் ஆனார் பெண்ணார்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
 கருத்துக்குஞ் சேயார்தாங் காணா தார்க்குக்
கோலம் பலவுடையர் கொல்லை யேற்றர்
 கொழுமழுவர் கோழம்ப மேய வீசர்
ஏல மணநாறு மீங்கோய் நீங்கார்
 இடைமருது மேவி இடங்கொண் டாரே. 3

தேசர் திறநினைவார் சிந்தை சேருஞ்
 செல்வர் திருவாரூர் என்று முள்ளார்
வாச மலரினங்கண் மான்றோல் போர்ப்பர்
 மருவுங் கரியுரியர் வஞ்சக் கள்வர்
நேச ரடைந்தார்க் கடையா தார்க்கு
 நிட்டுரவர் கட்டங்கர் நினைவார்க் கென்றும்
ஈசர் புனற்பொன்னித் தீர்த்தர் வாய்த்த
 இடைமருது மேவி இடங்கொண் டாரே. 4

கரப்பர் கரியமனக் கள்வர்க் குள்ளங்
 கரவாதே தந்நினைய கிற்பார் பாவம்
துரப்பர் தொடுகடலி னஞ்ச முண்பர்
 தூய மறைமொழியர் தீயா லொட்டி

நிரப்பர் புரமூன்றும் நீறு செய்வர்
　　நீள்சடையர் பாய்விடைகொண் டெங்கு மையம்
இரப்பர் எமையாள்வ ரென்னுள் நீங்கார்
　　இடைமருது மேவி இடங்கொண் டாரே. 5

கொடியார் இடபத்தர் கூத்து மாடிக்
　　குளிர்கொன்றை மேல்வைப்பர் கோல மார்ந்த
பொடியாரு மேனியர் பூதிப் பையர்
　　புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடியார் குடியாவர் அந்த ணாளர்
　　ஆகுதியின் மந்திரத்தார் அமரர் போற்ற
இடியார் களிற்றுரியர் எவரும் போற்ற
　　இடைமருது மேவி இடங்கொண் டாரே. 6

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்
　　பழையர் பிழையெலாம் நீக்கி யாள்வர்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
　　கலனொன்று கையேந்தி யில்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
　　பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிகவறிவர் என்று முள்ளார்
　　இடைமருது மேவி இடங்கொண் டாரே. 7

காவார் சடைமுடியர் காரோ ணத்தர்
　　கயிலாய மன்னினார் பன்னு மின்சொற்
பாவார் பொருளாளர் வாளார் கண்ணி
　　பயிலுந் திருவுருவம் பாக மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
　　புரமூன்று மொள்ளழலாக் காயத் தொட்ட
ஏவார் சிலைமலையர் எங்குந் தாமே
　　இடைமருது மேவி இடங்கொண் டாரே. 8

புரிந்தார் நடத்தின்கட் பூத நாதர்
　　பொழிலாரூர் புக்குறைவர் போந்து தம்மிற்
பிரிந்தார் அகல்வாயப் பேயுந் தாமும்
　　பிரியார் ஒருநாளும் பேணு காட்டில்
எரிந்தார் அனலுகப்பர் ஏழி லோசை
　　எவ்விடத்துந் தாமேயென் றேத்து வார்பால்
இருந்தார் இமையவர்கள் போற்ற என்றும்
　　இடைமருது மேவி இடங்கொண் டாரே. 9

விட்டிலங்கு மாமழுவர் வேலை நஞ்சர்
　　விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட் டுள்ளார்
மட்டிலங்கு தார்மாலை மார்பி னிற்றர்
　　மழபாடி யுள்ளுறைவர் மாகா ளத்தர்
சிட்டிலங்கு வல்லரக்கர் கோனை யன்று
　　செழுமுடியுந் தோளைந்நான் கடரக் காலால்
இட்டிரங்கு மற்றவனுக் கீந்தார் வென்றி
　　இடைமருது மேவி இடங்கொண் டாரே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனுர்

பண்—தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
　　கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நானுழன் றுட்டடு மாறிப்
　　படுசு ழித்தலைப் பட்டனன் எந்தாய்

அழுது நீயிருந் தென்செய்தி மனனே
யங்க ணுவர னேயென மாட்டாய்
இழுதை யேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 1

நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றியில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை அறிந்தேன்
அஞ்சி னேன்நம னுரவர் தம்மை
உரைப்பன் நான்உன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்ப னேனுக்கோர் உய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தை பிரானே. 2

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
போலும் வாழ்க்கை பொருளிலை நாளும்
என்னெ னக்கினி யிற்றைக்கு நாளை
என்றி ருந்திடர் உற்றனன் எந்தாய்
முன்ன மேயுன சேவடி சேரா
மூர்க்க னுகிக் கழிந்தன காலம்
இன்ன மென்றனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 3

முந்திச் செய்வினை யிம்மைக்கண் நலிய
மூர்க்க னுகிக் கழிந்தன காலம்
சிந்தித் தேமனம் வைக்கவும் மாட்டேன்
சிறிச்சிறி தேயிரப் பார்கட்கொன் றியேன்
அந்தி வெண்பிறை சூடுமெம் மானே
ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா
எந்தை நீயெனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 4

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவ ரும்புர வாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமு றையுனக் கேபொறை யானேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
வேண்டேன் மானிட வாழ்க்கையி தாகில்
இழித்தேன் என்றனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 5

குற்றந் தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கி
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய வாயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேனெனக் குய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 6

கொடுக்க கிற்றிலேன் ஒண்பொருள் தன்னைக்
குற்றஞ் செற்றம் இவைமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டி லைம்புலன் என்வச மல்ல
நடுக்க முற்றதோர் மூப்புவந் தெய்தி
நமன்த மர்நர கத்திடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை யருளாய்
இடைம ருதுறை யெந்தை பிரானே. 7

ஐவ கையர் ஐயரவ ராகி
ஆட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வ கையவர் வேண்டுவ தாகுல்
அவர வர்வழி ஒழுகிநான் வந்து
செய்வ கையறி யேன்சிவ லோகா
தீவ ணாசிவ னேயெரி யாடீ
எவ்வ கையெனக் குய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 8

ஏழை மானுட இன்பினை நோக்கி
இளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தான்பழுக் குந்நமக் கென்று
வஞ்ச வல்வினை உள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தஞ் செல்கதிப் பக்கம்
போக மும்பொருள் ஒன்றறி யாத
ஏழை யேனுக்கோர் உய்வகை யருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 9

அரைக்குஞ் சந்தனத் தோடகில் உந்தி
ஐவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இறைக்குங் காவிரித் தென்கரை தன்மேல்
இடைம ருதுறை எந்தை பிரானை
உரைக்கும் ஊரன் ஒளிதிகழ் மாலை
உள்ளத் தாலுகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையு மின்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் திருவாசகம்

கீர்த்தித் திருவகவல்

இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்.

போற்றித் திருவகவல்

இடைமரு துறையும் எந்தாய் போற்றி.

திருப்பூவல்லி

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தமறுத் தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

மாணிக்கவாசகர் நெடுங்காலம் இத்தலத்தில் தங்கி வழிபட்டுள்ளார். அவர் ஆத்மார்த்தக் கடவுளராகிய ஆத்மநாதரைப் பிரதிஷ்டை செய்து விளங்கிய தலமே தெற்கு வீதியில் உள்ள ஆவுடையார் கோயிலாகும். இதனையே "இடைமரு ததனில் ஈண்ட இருந்தும்" என்ற திருவாசக அடியும் வலியுறுத்தும்.

கருவூர்த்தேவர் திருவிசைப்பா

பண்--பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்

ஐயசெம் பொற்றேட் டவிர்சடை
  மொழுப்பி னழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
  மருவிடந் திருவிடை மருதே. 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்(டு)
  இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
  வகந்தொறும் பலிதிரி யடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
  சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதந் தீங்குழ லெங்கு
  மருவிடந் திருவிடை மருதே. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
  பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
  வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
  தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
  மருவிடந் திருவிடை மருதே. 3

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்(கு)
  அடியனேன் உள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளு மரிவைபா கத்தன்
  படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை அரையிலோ ராடை
  சுடருமிழ் தரவத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
  மருவிடந் திருவிடை மருதே. 4

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கல்வி
தெரியினுந் தெரிவுறா வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ஙன்
எண்ணில்பல் லூழிகள் உடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 5

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்
எப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழ னெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
தூங்கிருள் நடுநல்யா மத்தே
அருள்புரி முறுவன் முகிழ்நிலா வெறிப்ப
வந்திபோன் றொளிர்திரு மேனி
வரியர வாடு வாடுமெம் பெருமான்
மருவிடந் திருவிடை மருதே. 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்றுளி படாநனைந் துருகி
அழலையாம் புருவம் புனலொடுங் கிடந்தாங்(கு)
ஆதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்ச மிடர்படா வண்ணந்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. 7

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்திப் பட்டவிட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்விற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 8

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் இடைக்கிடைந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே என்றுநின் றுருகிப்
புலம்புவார் அவம்புகார் அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. 9

ஒருங்கிருங் கண்ணில் எண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம் பொழின் மருதயா மூதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. 10

திருச்சிற்றம்பலம்

பட்டினத்துப்பிள்ளையார் அருளிச்செய்த
மும்மணிக்கோவை

நேரிசையாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

கொண்டலின் இருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வான் உருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத.

மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை யாடு மப்ப
கைலாய வாண கௌரி நாயக
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து

பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையு
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்குங் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்

தாரகற் செற்ற வீரக் கன்னியும்
வரன்முறை படைத்த நான்முகத் தொருவனும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடியுருத் திரரும்
ஆனாப் பெருந்திறல் வானோர் தலைவனும்

செயிர்தீர் நாற்கோட்(டு) அயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனுஞ் செந்திக் கடவுளும்
நிருதியுஞ் சமனுஞ் சுருதிகள் நான்கும்
வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்

எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனும் அகத்தியன் றானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடன் முத்திறத் தடியரும்

திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்

ஓடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலில் தவளை யரற்ற
ஈசன் தன்னை ஏத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்

வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த

தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல வெம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயின் முற்றத்து மிமிசைக் கிடப்ப
வாய்த்தன வென்றுநாய்க் கட்ட மெடுத்தும்

காம்புகுத் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவரும்

இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையோர் நிற்க யானு மொருவன்
பத்தி யென்பதோர் பாடு மின்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையேன்
நின்னை

இறைஞ்சிலன் ஆயினும் ஏத்திலன் ஆயினும்
வருந்திலன் ஆயினும் வாழ்த்திலன் ஆயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்து நன்மை தீமை
ஆனவை நின்செயல் ஆதலின்
நானே யமையு நலமில் வழிக்கே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

மருதவாணர் நட்சத்திரமாலை

விநாயகர்

ஆனை முகத்தான் அடியிணை தான்றொழ
ஊன மனைத்து மறும்.

முருகன்

வள்ளி மணாளன் மலரடி தான்றொழ
உள்ளுணர் ஞானம் வரும்.

நூல்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

சீலமார் கோல மாய
சிவபரம் பொருளே உன்றன்
மேலதாம் புகழைப் பாட
விரும்புறு மடிய னேற்குப்
பாலன்போற் பாடும் ஆற்றல்
பாங்குடன் அளித்தே காப்பாய்
சூலமார் படைகைத் தாங்குஞ்
சோதியாம் மருதா போற்றி. 1

கோலமார் சடையாய் நின்னைக்
குறுகியே உருகி வேண்ட
ஏலமார் வடிவு காட்டி
இடைமரு தீண்ட வென்றாய்

ஞாலமே புகழு நின்றாள்
நாயினேன் அடைவ தென்றோ
தூலமாம் வடிவோ(டு) உள்ள
சோதியாம் மருதா போற்றி. 2

அம்மையோ(டு) அப்ப னாகி
அணிமரு துறைவாய் போற்றி
செம்மையாம் வாழ்வை நல்கும்
சிவபரம் பொருளே நீயும்
பொய்ம்மையே கூறி வாழும்
புலையனேன் நிலையை மாற்றி
உண்மையாய் ஆள வேண்டும்
உணர்மரு தப்பா போற்றி. 3

பிறவியை வேண்டேன் மேலும்
பெரியதோர் செல்வம் வேண்டேன்
மறவியை வேண்டேன் யானும்
மாபெரும் புகழும் வேண்டேன்
அறவனாய் வாழ யானுன்
அலரடி தொழுது நின்றேன்
உறவது தானும் நல்காய்
உயர்மரு துறையெம் மானே. 4

நாயினேன் நின்றாள் சேர
நன்னெறி நல்கல் வேண்டும்
பேயினேன் பித்தேன் வீணும்
பிறவியை எடுத்தே எய்த்தேன்
வாய்தனைப் பெற்று முன்றாள்
வாழ்த்திடத் தெரியா தேனைத்
தூயவ னாக்கி யாள்வாய்
தொன்மையாம் மருதூர்த் தேவே. 5

தொண்டரோ(டு) உறையு மேன்மை
துரிசறப் பெற்றே னில்லை
அண்டர்நா யகனே யுன்றன்
அருளது ங் கிட்ட வில்லை
கண்டவர் வெறுக்குந் தன்மை
கண்டுமென் உள்ளம் நைந்தேன்
கொண்டருள் செய்ய வேண்டும்
குலவிடை மருதெம் மானே. 6

காமமென் சிந்தை யாலே
கடைப்பட்ட தன்மை ஓரேன்
ஈமமாங் காட்டி லாடும்
எழில்மிகும் இறையே உன்றன்
நாமமென் மனத்துட் கொண்டே
நல்லருள் அடைந்தேன் நாயேன்
வாமமார் அருளை நல்கி
வாழச்செய் மருதெம் மானே. 7

காமத்தால் அறிவு கெட்ட
கடையனேன் உய்வ தென்றோ
நேமத்தர் அல்லர் உன்னை
நினைந்திட இயலா தென்ற
தூமத்த வாழ்வை உன்னித்
துரிசதைத் தொலைக்க வந்தேன்
வாமத்தில் உமையைப் பெற்று
வாழ்கின்ற மருதெம் மானே. 8

இடைமரு திறையைச் சார்ந்தே
ஏத்துவோர் இடர்கள் நீங்கும்
கடையனேன் குறையை நீதான்
களைவதும் என்றோ சொல்லாய்

செடியனேன் தீமை நீங்கித்
    திருவடி சேர்வ தென்றோ
மடையனை மிதித்தே யாண்ட
    வளர்மரு துறையெம் மானே. 9

இங்கெனை மறப்பா யாகில்
    யாரெனக் குறவு சொல்லாய்
பொங்குமுன் அருளை வேட்டே
    புலம்புமிவ் வேழை தன்னைப்
பங்கய வதன ஞானப்
    பரமனே யாள வேண்டிச்
செங்கைகொண்(டு) ஏத்து கின்றேன்
    திருவிடை மருதூர்த் தேவே. 10

கருணையே உருவ மான
    கங்கைநல் லாளை யேற்றும்
உருவமொன் றில்லா யென்றே
    உலகுளோர் உன்னைச் சொல்வர்
பெருமைதான் சிறிதும் வேண்டாப்
    பிழையேன் உனை அடைந்தேன்
கருமையாம் மலத்தைப் போக்கக்
    கருணைகூர் மருதெம் மானே. 11

அருவமே உருவ மானாய்
    அருட்சோதி லிங்க மானாய்
திருவிடை மருதூ ரீச
    திருவளர் கோயி லுள்ளாய்
அருமைசேர் அடியர் ஏத்தும்
    அரியயன் அறியா மூர்த்தி
பெருமைசேர் வாழ்வை நல்காய்
    பெருமரு திடையெம் மானே. 12

வேறு

மண்ணுலகிற் பிறந்தோரின்
மாசகற்றும் மாமணியே
பொன்னுலகத் தேவரொடு
முனிவர்பணி பொன்மணியே
என்னுலகத் தினிலுமிலா
எழில்மணியே மகாலிங்க
நின்னுலகத் தினில்யானும்
நிலைபெறவே செய்குவையே. 13

கனியில்மிகு நற்சுவையும்
கற்கண்டின் உறுசுவையும்
பனிமிகுநல் மலரணிந்த
பாவைநல்லார் தருஞ்சுவையும்
தனியாளுந் தரணிபனின்
தனியாட்சி தருசுவையும்
இனிவேண்டா மிகுசுவையாம்
இடைமருதன் கழற்சுவையே. 14

மையல்மிகு மனிதர்களே
வம்மொன்று சொல்லுகின்றேன்
தையலர்பால் அடைகின்ற
தனியின்பந் தனைவெறுத்து
ஐயனிடை மருதனென்றே
அரற்றினல் அவ்விறைவன்
துய்யவிடை ஊர்ந்துவந்து
துரியநிலை அருளுவனே. 15

பொய்யாமிக் காயத்தின்
புன்மைநிலை ஓராதே
மெய்யான தெனவெண்ணி
மெலிவடைந்து துயருற்றே

ஐயாவுன் அருள்பெறுநாள்
என்றென்றே அலேகின்றேன்
பொய்யாத வாழ்வருள்வாய்
புகழ்மருதில் உறைவோனே. 16

அடைந்தோர்தம் அருவினையை
அலக்கணுறச் செய்வதனுல்
மிடைந்தவர்தம் பவவினைகள்
மீளாவாம் தன்மைபெறும்
குடந்தைநகர் அதன்கீழ்பால்
குணக்குன்ரு விற்றிருந்து
இடந்தையறச் செய்கின்ற
இடைமருதெம் பெருமானே. 17

வேறு

தாயினும் மேலாம் தயையினைக் காட்டித்
தனியிடை மருதுறை மணியே
சேயவன் தானும் செந்நெறி வாழத்
திருவருள் என்றுகாட் டுவையே
நாயினும் கீழாம் நாயினேன் உடைய
நலிவினைப் போக்கியே என்னை
நீயினு மாளா திருப்பையேல் நிமலா
நின்னருள் பெறுவதெந் நாளோ. 18

வேறு

தையலார் மயலிற் பட்டோர்
தனக்கொரு மதியில் லென்னும்
மெய்யதா முரையை யானும்
வினைன விடுத்தே இந்நாள்

பொய்யதாம் வாழ்க்கை தன்னில்
　　புகுந்துமே உழலு கின்றேன்
ஐய நீ யாள வேண்டும்
　　அணியிடை மருதெம் மானே. 19

உன்னிலை உணரு தற்கு
　　உன்னருள் வேண்டு மென்ற
தன்னிலை யுணரா தேனைத்
　　தன்னருள் காட்டி ஆள்வாய்
இன்னிலை உற்றும் நாயேன்
　　இடைமரு தாவென்(று) ஏத்தும்
அன்னிலை அடைந்தேன் இல்லை
　　ஆண்டருள் மருதெம் மானே. 20

விறகிடைத் தீயாய் நிற்கும்
　　விடையமர் மருதா வுன்றன்
மறைவுறு தன்மை தன்னை
　　மனத்திடை உன்ன லுற்றே
உறவதாம் கோலை நாட்டி
　　உணர்வெனும் கயிற்றைப் பூட்டி
முறுகவே கடைய லுற்றேன்
　　முன்னிற்கா தொளித்த தேனே. 21

அரியயன் அறியா தானை
　　அணியிடை மருதா வென்றே
சிறியனேன் தினமு மேத்தச்
　　செய்தவ முடையேன் அல்லேன்
துரிசறு தன்மை மிக்க
　　துய்யனே உன்ருள் போற்றி
உரிமையோடு இதனை வேட்டேன்
　　உவந்திடை மருதா நல்காய். 22

பூசமாம் விழவு கொள்ளும்
புனிதநின் திருவைக் கண்டே
பாசமாம் தளைகள் நீங்கப்
பாருளோர் மருதைச் சார்வர்
நாசஞ்செய் வினையைப் போக்கி
நல்லருள் காட்டி ஆள்வாய்
வாசமார் சோலை சூழும்
மருதனே நின்றாள் போற்றி. 23

மண்ணுளோர் விண்ணு ளோராம்
மாண்புடை அடியர் எல்லாம்
மின்னுரு முறையி னோடு
மீளவும் காண்பான் வேண்டி
பொன்னுல கத்தோர் போற்றப்
பூவையை மணஞ்செய் வித்தே
நின்னுறு மணத்தைத் தானும்
நீளிடை மருதிற் காண்பர். 24

இத்தகு மருதைச் சார்வோர்
இடரது நீங்கப் பெற்றே
சத்திய வடிவ முள்ள
தனிப்பெரு முதலைச் சார்ந்து
வித்தகு பண்ப தாலே
வினைதாம் பிறவி நீத்துச்
சுத்தமாந் தன்மை பெற்றே
துணையடி சேர்வர் மாதோ. 25

அன்புறு மடிய ரெல்லாம்
அணியிடை மருதை ஈண்டித்
துன்புறு பிறவி தன்னின்
தொடக்கதை ஒழித்து வாழ்வர்

இன்புறு கவிஞர் ஓதும்
எழிற்றிரு முறையை ஓர
வன்புறு வாழ்வை நல்காய்
வளரிடை மருதெம் மானே. 26

அரியதாம் சிறப்பு மிக்க
அரனடி யாரின் தொன்மை
தெரியவே விழவு செய்யும்
சீரிடை மருதில் உள்ளோர்
துரிசது நீங்கப் பெற்றே
துய்யனும் மருதன் தாளில்
திருமிகு பெரியோர் போற்றத்
திருவினோ(டு) உறைவர் மாதோ. 27

—நூலாசிரியன்.

முற்றும்

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா(று)
அருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே.

— திருவாசகம்.

புழுகொடுபனி நீர்ச வாதுடன்
இருகரமிரு மார்பி லேபன
புளகித அபி ராம பூஷித கொங்கையானை

பொதுவினில்விலை கூறு மாதர்கள்
மணியணிகுழை மீது தாவடி
பொருவனகணை போல்வி லோசன வந்தியாலே

மெழுகெனவுரு காவ னுர்தம
திதயகலக மோடு மோகன
வெகுவிதபரி தாப வாதனை கொண்டுநாயேன்

மிடைபடுமல மாயை யால்மிக
கலவியஅறி வேக சாமிநின்
விதரணசிவ ஞான போதகம் வந்துதாராய்

எழுகிரிநிலை யோட வாரிதி
மொகுமொகுவென விச மேதினி
இடர்கெடஅசு ரேசர் சேனைமு றிந்துபோக

இமையவர்சிறை மீள நாய்நரி
கழுகுகள்கக ராசன் மேலிட
ரணமுககண பூத சேனைகள் நின்றுலாவச்

செழுமதகரி நீல கோமள
அபிநவமயி லேறு சேவக
செயசெயமுரு காகு காவளர் கந்தவேளே

திரைபொருகரை மோது காவிரி
வருபுனல்வயல் வாவி சூழ்தரு
திருவிடைமரு தூரில் மேவிய தம்பிரானே.